

60/=
தை, மாசி 2011
இருமாத இதழ்
நெஞ்சமே..
இலங்கையிலிருந்து
குடும்ப சஞ்சிகை!
நினைப்பு 2
துடிப்பு 1
கல்லடிப்பாலம்
கடலில் திகைப்பு..!
மாதாகோயில் கூரை..
கிறிஸ்மஸ் தாத்தா
மறைவிடம் !
`I am sure..!`
ஐந்தாம் ஆண்டு
புலமைப்பரிசில்..
உலக அளவில்..
ஈழத்து வாசகர்கள்!!
"யாழ்ப்பாண மாம்பழம்!"
பராக் ஒபாமா ..
மழையோ மழை
சிரிப்போ சிரிப்பு!

அமோக லாபம்..!
அமோக விற்பனை..!!




நாடெங்குமுள்ள வியாபாரிகளின் ஒரே தெரிவு!



# TOY PARADISE







அதிக விலைக்கழிவுடன்,
தரமான விற்பனைப்பொருட்களை
கொள்வனவு செய்ய,
தலைநகரில் ஒரே ஸ்தாபனம் ---


**TOY PARADISE**
94, Prince Street,
Colombo --11

Tel: 5679529, 2478393

Branch:
2A chappel Lane,
Prince Street,
Colombo --11
Tel: 2454451



வெளிநாட்டு விளையாட்டுப்பொருட்கள், அழகுசாதனங்கள், பாடசாலை உபகரணங்கள், வீட்டுப்பொருட்கள், பரிசுகள் மற்றும் கண்கவர் சாதனங்கள் மொத்த விலையில் ..



**இன்றே கொள்வனவு செய்து லாபம் பெறுங்கள் ..!**





## 'நெஞ்சமே ..'

புத்தாக்கம் , புதுமலர்ச்சி !
வாசிப்புக்கலையில் நமது
புதிய சகாப்தம் !

இதழ் உருவாக்கம் :
நிர்வாக இயக்கம் :
எஸ் .பீ . முத்து

வடிவமைப்பு :
புகைப்படம் :
கணனி வடிவமைப்பு :
எஸ் .பீ . முத்து

இணைப்பாளர்கள் :
ப. புருஷோத்தமன்
விஜயரட்ணம் ராஜேந்திரம்
அன்ரன் செல்வராஜன்
ச.சஞ்சிராஜ்

இப்பொழுதுபோக்கு சஞ்சிகை 555 , புதுத்தெரு , மன்னார் , இலங்கையில் இருந்து வெளி வருகிறது.




தொலைபேசி இல :
023 - 2250071
071 - 8612617
மின்னஞ்சல் :
nenjame @ gmail . com


சிறுகதை , ஜோக்ஸ் , நாடகம் யாவும் கற்பனையே . எவர் மனதையும் புண்படுத்த அல்ல .

விமர்சனங்கள் , கருத்துக்கள் , குறைகள் பணிவோடு ஏற்றுக்கொள்ளப்படும் .


முகவரி :
'நெஞ்சமே ..'
555 , புதுத்தெரு ,
மன்னார் .


இனிய தமிழ்ப்புத்தாண்டு
மற்றும் பொங்கல்
வாழ்த்துக்கள்





## Wel done Readers! Thank You ..





### இந்த இதழிலும் மாணவர் பக்கங்கள் ..!


கண்ணியா வென்னீர் ஊற்று ..62 ம் பக்..
கல்லடி பாலம் .. 32 ம் பக் ..
கணனி அறிவு .. 42 ம் பக்
சாதனைப்பாடசாலைகள் .. 6 ம் பக்
கெமிஸ்ட்ரி டிப்ஸ் .. 26 ம் பக்
மாணவர் குறுக்கெழுத்துப்போட்டி .. 34 ம் பக்


வாசிப்பதால் மூளை நரம்புகள் மகிழ்ந்து விரிகிறது
படிப்புஞானமும், கிரகிப்பு சக்தியும் அதிகரிக்கிறது.

— ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

" என்ன டொக்டர், நீங்க ஒரு வருஷமா மருந்து தாரிங்க .. கண் மங்க லாதானே தெரியுது .."

" இன்னும் ஒரு மாதம் சாப்பிடுங்க, எனக்கு பங்களா தெரியும் .."










பயன்தரு புதியவை
மீண்டும் பிறக்கட்டும்
பிறந்திடும் புது ஆண்டும்
அவ்வாறே பயன்தரட்டும் ..

அமைதியொடு மகிழ்ச்சியும்
ஊக்கமும் ஒருசேர
இருக்கின்ற உறவுகளில்
என்றென்றும் வாழட்டும்!

பயன்தரு முயற்சிகள் பலசெய்து
நல்லதொரு ..
மகிழ்வான சமுதாயம்
கொணர்ந்திங்கு சேர்ப்போம்

அத்தகு முயற்சியின் அங்கமே
இந்த ..
வாசிப்புக்கலை தரும்
'நெஞ்சமே ..' கேளாய் !



## சாதனைப்பாடசாலைகள்!

காலெடுத்து வைத்தவுடன் 'கப் சிப்' என்று

அமைதியாகி விடுகிறது மனம். பார்வையை ஓட விட்ட போது... 'ஆஹா, இது பிருந்தாவனமோ..'என்று புருவம் உயர்ந்தது. புற்தரைகளும், பூஞ்செடிகளும் அப்படி பூரிப்பாய் செழித்து வரவேற்றன. கல்வியின் அடித்தளமாக இருக்கவேண்டியவை அமைதியும்,எழிலும்தான் என்பதை திறமையாக சிந்தித்து வெளிப்படுத்தியிருக்கின்ற இந்த யுக்தி கல்வித்தளங்களுக்கு எடுத்துக்காட்டு.

மீண்டும் பார்வையை மேலே செலுத்தினோம் ..

' **வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்** '



வன்னிமாவட்டத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்று இது.

அடுக்குமாடிகளின் வகுப்பறைகளை நிறைத்துக்கொண்டு பல நூற்றுக்கணக்கான சூப்பர்மூளைகள் பாடங்களை சுவீகரிக்கும் 'பிஸி ' யான நேரம் ..

ஆனாலும் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு அமைதி !

கால்களை வருடும் புற்களை விலக்கியபடி நடைபாதைகளும், சிறிதும் பெரிதுமாய் வெட்டிவிடப்பட்ட மரங்களும் என்ன அழகு!

கல்விச்சாலைகள் என்பது கண்டிப்பை நினைவூட்டும் கட்டிடங்கள் அல்ல.. அவை இளம் சந்ததிக்கு அழகிய உலகைக் காண்பிக்க உழைக்கும் தாய்மையின் சின்னம் என்று எண்ணத்தோன்றுகிறது.

சிலிர்ப்பூட்டும்படியான மணியோசை பெரிதாக மிக அருகில் கேட்டது. புனித அந்தோனியார் தேவாலயம் கல்லூரிக்கருகில்!

பக்தியுணர்வு கல்லூரிவளாகத்தைச் சற்று அதிகமாகவே கற்றியிருந்த காரணம் புரிந்தது

'குட் மோர்னிங் சேர் ..'

'குட் மோர்னிங் டீச்சர் ..'

'கோட் ப்ளெஸ் யூ ..'

எதிர்ப்படுகிற மாணவிகளிடத்தில் இந்த வார்த்தைகள் கிடைக்கின்றன. அதுவும் சற்றே குனிந்து பணிவாக. வீட்டில் அடங்காத சுட்டிகளாக அட்டகாசம் புரியும் இவர்களின் உண்மைத்தோற்றம் இப்படிப்பட்ட அற்புதமா..!

**Wel done Teachers !**

**You are always great !!**

பெற்றோர்கள் எப்பவுமே ஏமாளிகள்தான்.

நிர்வாகமும், கட்டமைப்பும் தகுந்த தலைமையில்தான் உள்ளதென்பதை அறிந்தோம் அதிபர் அறையில்.

" **Yes , Please be seated ..**

என்ற புன்னகை வார்த்தைகள் அதிபர் ஆசனத்தை பார்க்கவைத்தன ..

அவர்--

அருட்சகோதரி மேரி யோசப்பின் சந்தியாப்பிள்ளை அவர்கள்.

கல்லூரியின் அதிபர்!

சாதனைப்பாடசாலைகள்!



வியப்புமிக்க விருதுகளை வசமாக்கி, சாதனைகளை சாதாரணமாக்கிய மாணவ விருட்ஷத்தின் அடிவேர். அதிபர் ஸ்தானத்து அன்னை !

பொறுப்பு அதிகம் என்பதை உணர்த்தும்வண்ணம் உரையாடல் அளவோடு இருந்தாலும் புரிதலும், பரிவும் தெரிந்தன.

வளாகத்தின் அத்தனை பிரிவுகளையும் கண்காணித்துக் கொண்டு அமைதியாய் பணியாற்றுகிறார். இந்த நிர்வாகத் தனித்துவம் எப்படி சாத்தியமாகிறது!?

இப்பாடசாலையின் தலைமைத்துவம் ஆரம்பத்திலிருந்தே அருட்சகோதரிகளின் கரங்களில் ஏற்று, மெருகூட்டப்பட்டு வருகிறது.

இன்றைய அதிபராக 2007இல் இருந்து முத்திரை பதித்து வரும் இவர் 11வது அருட்சகோதரி.


இவரின் கரங்களை வலுப்படுத்தும் பொறுப்பில் பணியாற்றும் மூன்று பிரதி அதிபர்கள் முக்கியமானவர்கள்.

திருமதிகள் ஞானமணி ஸ்ரீஸ்கந்தராஜா, கமலாம்பிகை யோகநாதன், தேவிகா உமாதேவன். தமது கல்லூரியும், கல்வி நிலையும் தரமாக உள்ளது என்கிற திருப்தி அவர்களிடம் தெரிகிறது.

அளப்பரிய பாராட்டுக்குரிய இன்னொரு முக்கிய அணியாக உழைக்கின்றது ஆசிரியர் குழு. கல்லூரி வளவுக்குள் உள்வாங்கும் நேரத்தில், இவர்களின் சுய விருப்பு வெறுப்புகள் வெளியேறி விடுகின்றன போலும். அப்படி ஒரு கூர்மையும், கற்பித்தலும்.

வகுப்பறைகளே வாழ்விடங்கள் போல வேலியிட்டுக்கொண்டு, சாதனைகளை நோக்கி மாணவிகளை விரட்டுவதில் குறியாய் இருக்கிறார்கள்.

பதிலுக்கு, இருமடங்காய் செயலில் இறங்கி விடுகிறார்கள் மாணவிகளும். கல்லூரியின் எதிர்பார்ப்பையும் மீறி அதிகமாகவே சாதனைப்படிகளைத் தாண்டி விடுகிறார்கள்! இதன்மூலம் கடுமையான பயிற்சி களில் வறுத்தெடுத்த குருநாதர்களை இன்ப அதிர்ச்சி கொடுத்து செல்லமாய் தண்டித்து விடுகிறார்கள்.







வவுனியா மாவட்ட கல்விச்செயல்பாட்டிலும், இணைப்பாட விதானத்திலும் வ- இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தின் சாதனைப்பட்டியல் நீளமானது.

வருட தவணைப்பரீட்சைக்கு முன்னதாக இடைத்தவணைப்பரீட்சைகளும், க.பொ.த சா-த, உ-த பரீட்சைக்கு உதவியாக கருத்தரங்குகளும் நடத்தப்படுவதால் மாணவிகளது ஆற்றல் பட்டை தீட்டப்படுகிறது. புள்ளிகளை கைப்பற்றும் பயிற்சியும் வசமாகிறது.

## சாதனைப்பாடசாலைகள்!



சாதனைகளை ஈட்டுவதற்கென்று முகாமிட்டபடி வியூகம் அமைத்துக்கொண்டு வருடாந்தம் சாதிக்கிறார்கள்.


தரம் 1க்கான பிள்ளைகளை தேர்ந்தெடுப்பதில் நிர்வாகத்தின் நிலைமை இக்கட்டானது. அவ்வளவு விண்ணப்பங்கள் குவியும்.

சாதனைப்பாடசாலைகள்!

2009 இல் க.பொ.த.சா-தக்கு தோற்றியோர் 163. சித்தியடைந்தோர் 151.

2010 இல் தரம் 5 இல் 94 பிள்ளைகள் பாஸ். இரண்டு மாணவிகள் 184 புள்ளிகளைப் பெற்று, மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப்பெற்று கலக்கினார்கள்.

சாம்பவி தவராஜாவும், சங்கவி கணேசலிங்கமும்தான் அந்த சுட்டிகள்!



# சாதனைப்பாடசாலைகள்!

தமிழ் தினப்போட்டிகளில் மொழி யறிவு வெளிப்படும்போது ..
2010 இல் தேசிய மட்டத்தில்
இசையில் 1ம் இடத்தில் ..
கேசவி, வைஷ்ணவி, சிபிஷா, டபித்தா, ஹர்சிக்கா, கிருஷிகா, ஆரபி, மெர்லின், சுரபிகா, மோ னேஸ்வரி ஆகிய 10 பேர் தமது பெயரை பொறித்தனர்.

வாசிப்பில் 2ம் இடத்தில்
டிலக்ஷினி, சாம்பவி இருவரும்
தனி இசையில் 3ம் இடத்தை
சிபிஷாவும் பெற்றனர்.

மத்திய வங்கியினால் இதே ஆண்டில் நடத்தப்பட்ட **E CON, I CON** வினாடி வினாப்போட்டி யில் இறுதிச்சுற்றில் 2ம் இடத் தைப் பெற்ற மாணவிகள் ..
சஜித்தா, சிந்துஜா, வக்ஷிகா!

இம்மூவரும் நிகழ்த்திய இச்சாதனையின் மகுடமாக ரூபா 4,15,000 பாடசாலைக்குக் கிடை த்தது! **WEL DONE STUDENTS !**

உடற்பயிற்சிப்போட்டியிலும் தேசியமட்டத்தில் இரண்டுமுறை முதலிடத்தையும், இவ்வாண்டு 3ம் இடத்தையும் சுவீகரித்தது.

குறுந்தூர ஓட்ட வீராங்கனை
ரொஜிட்டா!


100 மீ, 200 மீ, உட்பட நீளம் பாய்தலிலும் வெற்றிகள் குவித்து கிண்ணங்களோடு திரும்பியவர்!

மகளிர் கிரிக்கெட் அணியும், மேசைப்பந்து அணியும் மாகாண மட்டத்தில் இப்போதிருந்தே 2ம் 3ம் இடங்களைப் பிடிக்க ஆரம்பி த்து விட்டன.

ஆங்கில தினப்போட்டியில் மாகாண மட்டத்தில் இவ்வாண்டு பெருவாரியான இடங்களைக் கை ப்பற்றிய அணியொன்று, தேசிய மட்டத்தை எதிர்பார்த்து உஷார் நிலையில் உள்ளது.

நன்றி : கவிஸ்ரா ரவீந்திரன்
ஆசிரியை
வ-இறம்பைக்குளம்
ம.ம.வி., வவுனியா

**தமது வளர்ச்சியை அனைத்து தமிழ் பாடசாலை நெஞ்சங்களோ டும் பங்கிட்டு மகிழும் இவர்களை வாழ்த்துகிறோம் ..**
**ஏனைய பாடசாலைகளும் தமது மகிழ்ச்சியை பங்கிட்டுக்கொள்ள இப்பகுதிக்கு அழைக்கிறோம்.**






# 'டெங்கு ராஜ்யம்'

**DENGUE**



தேங்காய் சிரட்டை களை புதைத்தால் என்ன .. எங்களுக்கு டயர் இருக்கிறதே..!

டயரை ஒழித்தால் மட்டும் விடுவோமா.? ஒருசொட்டு நீர் தேங் கினாலும், புகுந்து விளையாடுவோம்ல ..





கூரைப்பீலிகளை எவன் காணப்போறான் ? அது போதும் உனக்கு. ஹாயா குடித்தனம் நடத்திக்கிட்டு குடும்பத்தையே விரட்டு

மரங்கள், இலைகளுக்குள்ள பாரு .. தேங்கியிருக்கும் நீரு ..பூச்சாடியில் கிடக்கும் சேறு .. இது அக்கறையில் லாத ஊரு..நம்மபாடு ஜோரு





பெரல், பீப்பாய், டின் எல்லாம் கண்டுக்கமாட் டாங்க .. தயிர்சட்டி, ஐ ஸ்கப்பெல்லாம் நமக்கு மாமியார் வீடு மாதிரி..



# “உலகத்தை நெருங்குகிறோம்...”

பெருமளவு நெஞ்சங்களின் கடிதங்களில் காணப்பட்ட சந்தோஸம், தேக்கிவைத்திருந்த வாசிப்புத் தாகத்தை அடையாளம் காட்டிவிட்டது.

வெளிநாட்டு சஞ்சிகைகளுக்குமட்டுமே கொடுக்கப்பட்டிருந்த அந்த ‘மாயா ஜால’ எழுத்து மர்மத்தை நம்நாட்டுச் சஞ்சிகைளும் கற்று வருவது நல்ல சகுனம். வாசகர் கடிதங்களில் காணப்பட்ட உற்சாகம்-- வாசிப்புக்கலையில் பிரிட்டனுக்கும், அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும்கூட ஈடுகொடுக்க நம் ஈழத்து வாசகர்கள் தயாராகிவிட்டதை எடுத்துக்காட்டியது.

ஆனால் வாசிப்பில் கிடைக்கும் சுவையை இன்றும்கூட விளக்கித்தான் ஊட்டவேண்டியிருக்கிறது என்பது கசப்பான உண்மை. இது கவனிப்பாரற்றுகிடக்கின்ற ஒரு ஊனம்.

‘வாசிக்கிறதுக்கு எங்க நேரமிருக்கு ..,’
‘புத்தகமெல்லாம் இப்ப யார் வாசிக்கிறது ..’
‘இன்டர்நெற் , ஈமெயில்தான் பிள்ளைகள் பாக்கினம் ..’

---என்று நம் ஆட்கள் ஒரு பெருமையாகவே சொல்லிக் கொள்வதைப்பார்க்க வேண்டுமே .. விஞ்ஞான சாதனங்களைக் கண்டுபிடித்துக் குவித்துக்கொண்டிருக்கிற வெளிநாடுகளில்கூட வாசிப்புப்பழக்கத்தை ஒதுக்கமுடியாமல் தவிக்கிறார்கள். புதுப்புது சஞ்சிகைகளும், புத்தகங்களுமாய் தேடி வாசிக்கிறார்கள்.

வாசிப்பதால் மகிழ்ச்சியும், அதிலிருந்து அறிவும்,அறிவிலிருந்து ஆன்ம சக்தியும் பெற்ற தனிமனிதர்களால் உருவாகி வருகின்ற சக்திமிக்க உலக சமூகங்களைக் கண்டும் ‘வாசிக்க நேரமில்லை’யென்று கூறிக்கொள்வது நமக்கு பெருமையாம்.



இவர்களைச்சொல்லியும் குற்றமில்லை. வாசிப்பு என்றால் ஒதுங்கிவிலகும் ஒரு வேண்டாத விஷயமாக இருப்பதற்கு காரணமும் இருக்கிறது. ஏகப்பட்ட எழுத்துக்களால், .. முடிவில்லாத வாக்கியக்கோர்வைகளால், .. வலிந்து திணிக்கின்ற கருத்துகளால், .. அழுத்தம் தருகின்ற சொற்களால் வாசிப்புச்சமூகம் மிரண்டுபோயிருக்கிறதோ தெரியவில்லை.

மறுபக்கம், வாசிப்பு என்கிற சுகானுபவத்தை படிப்பு என்ற கட்டாய வேலையோடு சம்பந்தப்படுத்தி கடினப் பொருளாக்கிவிட்டார்கள். இதனால்தான் நம்நாட்டில் மட்டும் வாசிக்கும் விஷயத்தில் இவ்வளவு சிக்கனம்.

வாசிப்புப்பழக்கத்தால் மகிழ்ச்சியான சமூகமாக இருப்பதைவிட, படிப்பில் ஊறி உத்தியோகம் பெற்றால் போதும் என்கிறது ஈழத்து சமூகம். முடிவு ..? காலம் முழுக்க உத்தியோகம் பார்க்கின்ற இயந்திரம்தான் ..

விளைவுகளும் இருக்கின்றன .. உத்தியோகத்திற்கு மட்டும் பயன்படும் படிப்பறிவு, சமூகம் சார்ந்த உணர்வுகளை புரிந்துகொள்ள உதவாது. இந்த குறை நம்மைச்சுற்றி அடர்ந்துபோயிருப்பதை வெளியில் இருந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இயற்கை, சமூகம், உணர்வு, பக்தி, தியாகம், ஆன்மா யாவும் வாசிப்பிலிருந்துதான் பூரணமாகக்கிடைக்கின்றன. இதைத்தான் காந்தியும் சொன்னார்.

வாசிக்கும் பழக்கம் நமக்குமட்டும் சபிக்கப்பட்டிருந்ததால்தானோ என்னவோ, எவ்வளவோ விஷயங்களைப் புரிந்துகொண்டு காலாகாலத்தில் உலகத்தோடு ஒன்றாமல் போய்விட்டோம். இப்பொழுது தனியே அழுது தவிக்கிறோம்.

வாசிப்புப்பழக்கத்தை ஊக்குவிக்க பள்ளிச்சமூகம் முதல், கிராமத்துக் குடிசைகள்வரை வந்து கதவைத்தட்டுகிறது ‘நெஞ்சமே..’ . இதன் துடிப்பு தொடர்வதும், அடங்குவதும் உலகத்தை நெருங்கும் உங்கள் வாசிப்பில்தான் இருக்கிறது ..

நன்றியுடன் , முத்து

## எல்லாம் அறிந்த மனிதா..!



அன்றைய பொழுது புலர்ந்த போது..

புல்லினங்கள் பாட்டை நிறுத்தின
கால்நடைகள் மிரண்டு விழித்தன
விலங்கினங்கள் விழிப்பாய் பதுங்கின
ஆயினும் --
மனிதர்களை மறக்காமல் தேடிப்போயின

அவனோ உறங்கிக்கொண்டிருந்தான்
அருந்திக்கொண்டிருந்தான்
எழுதிக்கொண்டிருந்தான்

அவனுக்கென்ன .. எல்லாம் அறிந்தவன்!
அது மட்டுமா .. அணுவிலிருந்து அண்டம்வரை
அவனது ஆட்சி!

'இருந்தாலும் --,' மான்குட்டி யோசித்தது
அதிக மிரட்சியை இன்று அதிகமாய்
விழிகளில் காட்டி விளக்கியது --

தயக்கத்தைத் தள்ளிவைத்து
தைரியமாய் முட்டிப்பார்த்தது பசு.
'ம்மா.. ம்மா ..' முடிந்தமட்டும்
முக்கி முச்சிரைத்துச்சொன்னது --

தன்பங்கை நிறைவேற்ற தாவியது மயில்
'ரேய்க் ..ரேய்க் ..' உயிர்போகக் கூவியது
கூறிக்கூறிக் களைத்தது --



## சுனாமி நாளில் ..

எதிர்ப்பட்ட மனிதரெல்லாம்
ஏற்கின்றாரில்லையே .. என்செய்வோம் ..

புரிந்தது .. 'எல்லாம் அறிந்தவன் ..
நாமா சொல்வது' புரிந்தே பறந்தன புல்லினம் ..
விரைந்தே மறைந்தன விலங்கினம் ..
அழுதே அகன்றன கால்நடை ..

இன்று அவை கண்கலங்கி அஞ்சலிக்கின்றன ..
மனிதனின் சமாதிகளில் ..
" எஜமானர்களே .., உங்கள் வாரிசுகளுக்காவது
சொல்லி வையுங்கள் .. எங்கள் பேச்சையும்
கேட்கும்படி .."






# புதிதாய் நெஞ்சமே ..

புதுப்பானை
புது அரிசி
புத்தாடையுடுத்திப் பொங்குக ..


பொங்கிப்பூரிக்குக நெஞ்சமே!




இழந்ததை துறந்திடு
வடுக்களை மறந்திடு ..

இருப்பதைப் புதிதாய் ,
இன்னும் புதிதாய் --
மாற்றிடு ,
இன்பம் ஏற்றிடு ..











## பிராணிகளும் மனிதர்களுக்கு

சளைத்தவைகள் அல்ல எனத்தெரிகிறது -- விண்வெளிப் பயணங்களை ஆராயும்போது.


ஐந்தறிவு விண்வெளி வீரனாக முதலில் புறப்பட்டது 'லைக்கா' என்பது தெரியும். ஆனால் அதன் உண்மைப்பெயர் 'குட்ரேவ்கா'. அழகான பெண் நாய். 1957 இல் ரஷ்ய வீராங்கனையாக சென்ற அது பாவம் அங்கேயே இறந்துபோனது. 1958 இல் அமெரிக்க ரொக்கட்டில் பயணமாகிய லாங்கா, பெஞ்சி என்னும் சுண்டெலிகள் வெற்றிகரமாக பூமியின் வாயுமண்டலத்திற்குள் திரும்பி வந்தாலும், கண்டுபிடிக்கப்படவில்லை. அதே அமெரிக்கத் தளத்தில் இருந்து மீண்டும் புறப்பட்ட ஏமல், பேக்கர் என்ற குரங்குகள் ஆய்வை நிறைவுசெய்து பத்திரமாய் பூமிக்குத் திரும்பின. 1959 இல் ரஷ்ய நிலையத்திலிருந்து சென்ற இரண்டு முயல்கள், அமெரிக்கத் தளத்திலிருந்து சென்ற சாம் என்ற குரங்கு, மிஸ் சாம் என்ற பெண்குரங்கு பத்திரமாய் திருப்பி மீட்கப்பட்டன. 1960 இல் ரஷ்யா ஏவிய விண்களத்தில் அதிகளவில் பிராணிகள் பயணமாயின. 40 சுண்டெலிகள், இரண்டு எலிகள், சகிதம் ஆய்வில் ஈடுபட்ட இரண்டு முயல்கள் முதல் தடவையாக கிரகப்பாதையால் பத்திரமாக பூமியை வந்தடைந்தன.

**தன்மீதான தேசிய பாதுகாப்புச்சட்டத்தை சென்னை உயர் நீதி மன்றம் ரத்து செய்ததை அடுத்து இயக்குனர் சீமான் வேலூர் சிறையில் இருந்து விடுதலை ஆனார்...**


அப்போது 'நாம் தமிழர்' இயக்கத்தினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். செய்தியாளர்களிடம் பேசிய போது------

" இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசியதாக தேசிய பாதுகாப்பு சட்டத்தில் என்னை இரண்டுமுறை சிறையில் அடைத்தனர்... தமிழக அரசு என்னை சிறையில் அடைத்தது. நீதிமன்றம் என்னை விடுதலை செய்தது. இந்தமுறை ஐந்து மாதங்கள் சிறையில் இருந்தேன். இதனால் என் தொழில் பாதித்தது. இதற்கு காரணமான தமிழக அரசிடம் நட்ட ஈடு கேட்கப்போகிறோம்."

தொடர்ந்து இடம் பெற்ற உரையாடலின்போது "நாம் தமிழர் இயக்கம் கலைஞர் கருணாநிதிக்கு எதிராக உங்களை பொது வேட்பாளராக நிறுத்த போகிறதாமே?" என்று கேட்டதற்கு..
"நடக்கலாம்" என்று பதில் சொன்னார் சீமான்.







**டொல்பின் மீன்கள் யாழ் குடாநாட்டுக் கரையோரங்களில் கரையொதுங்குவது சில நாட்களின் முன்பு அதிகரித்தது.**

ஊர்காவற்துறை, சுருவில் பகுதியில் ஆழம் குறைந்த ஏரியில் இரண்டு டொல்பின்கள் ஒதுங்கின. ஒன்று உயிரிழந்தும், மற்றது குற்றுயிராகவும் காணப்பட்டது. கடற்தொழிலாளர்களின் வலைகளிலேயே இவை அகப்பட்டதாக கூறப்படுகிறது. ஊற் காவற்துறைப் பொலிஸார் இந்த டொல்பின் மீன்களை பொறுப்பேற்றனர்.சில மாதங்களுக்கு முன் பருத்தித்துறை கடற்பரப்பிலும் டொல்பின் மீன் ஒன்று கரையொதுங்கியிருந்தது.

தற்போதுள்ள சீரற்ற காலநிலை காரணமாகவே அவை கரையொதுங்குவதாகவும் - சுகயீனம், காயங்களுக்கு உட்படுவதும் காரணம் என்றும் கூறப்படுகிறது. பொதுவாக டொல்பின் மீன்கள் ஆழமான கடல் பகுதிகளில் வசித்தாலும் குடாக்கடலில் நீண்டகாலத்தின் பின்னர் அவை கரை ஒதுங்குவதாக கடற்துறை அதிகாரிகளினும், தொழிலாளர்களும் தெரிவிக்கின்றனர்.



# வாழ்வது கலை ..

குளிர்ந்த நீரோடை ..
பனி படர்ந்த புல்வெளி ..
கையருகில் வானம் ..
ஆனந்த சூர்யோதயம் ..
கண்ணுக்குள் பிரபஞ்சம் ..
கணப்பொழுதில் கிடைத்தது, எப்படி..?

புன்னகையோடு விளக்குகிறார் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ...

" மனுசன்கிறவன் எப்பவுமே குழந்தைதான் .. குழந்தையைப் பாருங்க... சிரிச்சி விளையாடிக்கிட்டே இருக்கும். ஏன்னா ..அதுக்குள்ள அவ்வளவு மகிழ்ச்சி இருக்குது.. நம்மளும் குழந்தைதான்கிறதை நினைச் சிக்கிட்டா ஜாலிதான். .. துக்கம் வரும்போது மட்டும் குழந்தை மாதிரி அழத்தெரியுதில்லையா..? "

"எந்த பிரச்சினையும் ஒரு குழந்தைய எதுவும் பண்ணாது .. நீங்களும் அப்படி வாழ வழி இருக்கு .. புரியுறதா ..? "









' வாழும் கலை அமைப்பு '

162 நாடுகளில் வகுப்புகளை நடத்திக்கொண்டு ஒரே சமயத்தில் பல்லாயிரம் பேருக்கு பயிற்சி கொடுத்துக்கொண்டிருக்கிறது இந்த அமைப்பு.

' பயிற்சி எதற்கு .. அன்றாடம் வாழ்க்கை ஓடிக்கிட்டுதானே இருக்கு ' என்று சொல்லிவிட்டு போய்க்கொண்டிருப்பவர்களை கொஞ்சம் நிறுத்தி ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டுப்பாருங்கள்.. 'எப்படி இருக்கிறீர்கள்..?'' என்று.

ஏறக்குறைய எல்லா பதில்களும் ஒரே மாதிரி இருக்கும் பாருங்கள் ..!

' பரவாயில்லை ..'
'ஏதோ போகுது ..காலம்..'
'இருக்கிறம் ..ஒரு மாதிரி ..'

செழிப்பாக தோற்றமளிப்பவர்கள்கூட இப்படி டல் ஆகத்தான் பதில் சொல்வார்கள். படித்தவர்கள், பதவிகளில் உள்ளவர்களும் விதி விலக்கல்ல.

ஏன் அத்தனை சலிப்பு ? ஒரு பதில் சொல்வதில் கூடவா சந்தோஷத்திற்கு தட்டுப்பாடு ?

சந்தோஷம் இருக்கிறது. ஆனால் உள்ளிருந்து சுதந்திரமாக வெளிவருவதில் தடை இருக்கிறது.

மன அழுத்தம், உடல் இறுக்கம், திருப்தியின்மை, சுயத்தை அறிந்துகொள்ளாமை போன்றவைகளே அந்த தடைகள்.

இத்தகைய உட்பிரச்சினைகள் கண்ணுக்கு தெரிவதில்லை. எல்லாம் சரியாக இருக்கிறது, நடக்கிறது என்று நமக்குள்ளேயே ஏகப்பட்ட திருப்தி

ஆனால் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒரு குரல் கேட்டுக்கொண்டே இருக்கும். ஒரு தத்துவத்தை வலியுறுத்திக்கொண்டிருக்கும். அதைக் கேளாமலேயே போய்க்கொண்டிருப்போம். நமக்குள்ளிருந்து வருகின்ற அந்த செய்தியை என்றாவது ஒருநாள் கேட்கின்றபோதுதான் நமது அருமை நமக்கே தெரிகிறது.

அதுவரை காத்திருந்து காலத்தை முடிப்பதற்குள் அந்த வாய்ப்பை உருவாக்கித்தருகிறார் குருஜி...

நினைத்ததை செய்கிறோம், நடக்கிறோம் என்பதால் மட்டும் நாம் வெற்றிபெற்றவர்களாகி விட்டோம் என்று நினைத்தால் அது தவறு.

நமக்குள் இருக்கின்ற சக்தியை அறிவதும், அதை நடைமுறை வாழ்வில் பயன்படுத்தி சாதனை செய்வதும்தான் உண்மையான வெற்றி.
இதன்படி செயலாற்றும் தத்துவங்களை சமயங்கள் சொல்லித் தந்திருந்தாலும் பயிற்சிகளின்றி ஒருநாளும் செயலாற்ற முடியாது.

மதம், இனம், மொழி, நாடு என்று எந்த பிரிவுக்கும் தேவையான பொருள் அமைதியும், சந்தோஷமும் தான்.
இவையிரண்டும் வசமானால் எல்லாம் கிடைக்கும்



பயிற்சிகளினால் இவைகளை சாத்தியமாக்கித் தருவதால், வாழும் கலை அமைப்பு உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்துள்ளது.

சாதாரண மனிதன் முதல் நாட்டின் தலைவர்கள் வரை இந்த பயிற்சிகளை நாளாந்தம் செய்து வருகிறார்கள். குருஜியின் பயணங்களின் போதும், நிகழ்ச்சிகளின் போதும் திரளும் ஜனவெள்ளத்தின் களிப்பை எப்போதும் பார்க்கலாம்.

குருஜியின் பயிற்சி வகுப்புகள் உலகெங்கும் இயங்கி வருகின்றன. பூரண ஞானம் பெற்ற தலைசிறந்த பயிற்சியாளர்கள் அவைகளை நடத்தி வருகிறார்கள்.



எந்தவிதமான உபகரணங்களுமின்றி நாம் எமக்குள்ளேயே கொடுத்துக்கொள்கிற பயிற்சி இது. எமக்குள்ளேயே மறைந்து கிடக்கிற அற்புத சக்தியையும், மகிழ்ச்சியையும் அறிமுகப்படுத்தி வைக்கின்ற நிகழ்ச்சி இது.


மனிதகுல நலத்திற்காக குருஜி நடத்திய தேடல் மகத்தானது. பாராட்ட வார்த்தைகள் இல்லாதது. பல பல ஆண்டுகளாக முயன்று, கிடைத்தற்கரிய பயிற்சி முறைகளை உருவாக்கினார். அனுபவ ரீதியாக தன்னையே அத்திவாரமாக அர்ப்பணித்தார்.

காடுகளும், மலைகளும் பல்லாண்டு காலங்களாக அவருக்கு பயிற்சிக்கூடங்களாயின. வீடு வாசல், சுக துக்கம் யாவுமே அவரின் சிந்தையில் இல்லாமல்போயின.

ஒவ்வொரு பயிற்சிமுறையும் அவரது கடின முயற்சியினால் உருவாக்கப்பட்டது. பண்டைய சித்தர்களும், யோகிகளும்காட்டிச்சென்ற சித்தாந்தங்களுக்கு உயிரூட்டியிருக்கிறார் குருஜி.

மருத்துவர்களும், விஞ்ஞானிகளும்கூட தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் குருஜியிடம் நிறைந்து கிடக்கின்றன என்பது வியப்புக்குரியது. அந்த அளவுக்கு ஆன்மீகத்திலிருந்து பயிற்சிமுறைகளை நவீனப்படுத்தியிருக்கிறார்.

யோகா, தியானம், பிராணாயாமம் போன்ற ஆன்மீகப்பயிற்சிகளிலிருந்து இன்னும் புதிய பல முறைகளை உருவாக்கி வியப்பளிக்கிறார். ஆன்மீகம் என்றால் விலகிச்செல்கின்ற இளம் சமுதாயத்தை நவீன மனவளக் கல்வி மூலம் லட்சக்கணக்கில் ஈர்த்து வருகிறார்.



உடல், மனம், ஆன்மா என்கிற மூன்றையும் கண் இமைக்கும் நேரத்துக்குள் நமது உள்ளங்கையில் தந்து விடுகிறார் குருஜி. காலம் காலமாக புலப்படாமல் நமது அறிவுக்கு டிமிக்கி காட்டி வருகின்ற ஆழ் மனமானது தானே நம்மைத்தேடி வந்து சொந்தம் கொண்டாடுகிறது.

பயிற்சியின்போது முதலாவது வினாடியிலேயே உடலைச்சுற்றி வளைத்திருந்த இறுக்கங்கள் தளர்ந்து விலகும் சுகத்தை அனுபவிக்கலாம். நமது உடல் இத்தனை வேதனையை சுமந்திருந்ததை அறியாமலேயே இருந்தோமே என்று அப்போதுதான் தெரியும்.

சுவாசம் ஜீவனையும், உடல் ஆகாயத்தையும், அறிவு சமுத்திரத்தையும் வியாபித்து சக்தி பெறும் ஆற்றல் கைகூடும்.


'வாழும் கலை அமைப்பு' தனது இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை கொண்டாடியபோது இருபத்தைந்து லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

உலகெங்குமிருந்தும் பெருந்திரளாக மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சி , பல ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மைதானத்தில் பெங்களூரில் நடந்தது.

ஐந்து நாட்கள் தொடர்ந்த இம் மாபெரும் நிகழ்வில் தினமும் மூவாயிரம் இசைக்கலைஞர்கள் ஒரே மேடையில் இசைமழை பொழிந்தனர். ஒவ்வொரு கர்நாடக வாத்தியக்கருவியையும் நூற்றுக்கணக்கான கலைஞர்கள் இசைத்தனர். உலகக்கலைஞர்கள் உட்பட பண்ணாட்டு சமூகமும் ஒரே இடத்தில் கூடியிருந்தது குருஜியின் தியாகத்திற்கும், தெய்வீகத்திற்கும் கிடைத்த காணிக்கையாகும்.

நெருங்கிவரும் முப்பதாண்டு நிறைவு நிகழ்ச்சியில் இம்முறை ஐம்பது லட்சம் பேர் எதிர்பார்க்கப்படுகிறார்கள்

" ஜெய் குரு தேவ் "







"இந்த பொங்கலுக்காவது சல்வார் உடுப்பு வாங்கித்தாங்க .."




"என்ன டொக்டர் நீங்க .. ஏ பி சி டி வரிசைகூட தெரியாம எழுதி வச்சிருக்கீங்க ..? "



"ஆபத்துக்கு உதவி கேட்டா 'ரொபின்ஸன் குருசோ'ன்னு பேரு வக்கிறாங்களே .. யாரு அது ..? "

khzt ez;gh;fSf;fhf

M.M.M.மத்லூப்
(க.பொ.த. உயர்தரம்)



Chemistry

# இலத்திரன் ...

ஆரம்பத்தில், அதாவது 19ம் நூற்றாண்டில் இருந்து செய்யப்பட்ட பரிசோதனைகள் மிகச்சிறிய துணிக்கைகள்தான் 'மின்' னை எடுத்துச் செல்கிறதென்று சொல்கிறது. 'இலத்திரன்' (Electron) என்ற பெயரைப் பயன்படுத்தியவர் ஜீ. ஜே. ஸ்டொனி என்பவர் ஆவர்.

'மின்னணுக்கள்' என்று இருக்கவேண்டும் என்பதற்கு மின்னோட்டம், நிலைமின்னேற்றல், மின்னோட்டம் என்ற துணிக்கைகள் உதவின.

'ஜோன் பேர்செலியஸ்' என்பவர் மூலகங்களின் அணுத்திணிவுகளை ஆரம்பத்தில் எடுத்தியம்பியவர்களில் ஒருவர். ஒன்று, இரண்டு என்ற எழுத்துகளின் மூலம் மூலகங்களின் குறியீடுகளை உருவாக்கியவரும் இவரே. இலத்திரன் என்றும், இலத்திரன் ஏற்றம் பற்றியும் முதன்முதலாக 'ஸ்டொனி' யினாலேயே



கூறப்பட்டது. இவர் சிறந்த ஒரு பௌதிக விஞ்ஞானி ஆவார்.


ஜே.ஜே. தோம்ஸன் என்பவர் உறுதியான சான்றுகளுடன் இலத்திரன்கள் இருப்பதைக்கண்டறிந்தார். கதோட்டுக் குழாய் பரிசோதனை மூலம் இது நிறைவேறியது.

## கதோட்டுக்குழாய் -- Cathode Tube

தாழமுக்கத்தில் அதி உயர் அழுத்த மின்னைக் கடத்தக்கூடியது என்று அறியப்பட்டது. கதோட்டுக்குழாய் , மின்னிறக்கக்குழாய் 1860 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்பட்டது. Crookes Tube என்றும் இதனை கூறுவர்.

உயர் அழுத்தமுள்ள மின் தாழமுக்கத்தில் அடைக்கப்பட்ட வாயு ஒன்றுக்குள் செலுத்தப்பட்டது. இதனுடைய பகுதி அனோட் உயர் நேரேற்றமும், கதோட் உயர்மறை ஏற்றமும் பெற்றன. இந்த ஏற்றங்களை குறைப்பதானால், அதற்கு ஒரே வழி ஏற்றமுள்ள துணிக்கைகள் ஒன்றிலிருந்து, மற்றொன்றிற்கு வாயு ஊடாக பாய்வதே அது . இந்நிலையில், ஒரு கதிர்கற்றை வீச்சு கதோட்டில் இருந்து, அனோட்டுக்குப் பாய்கிறது. இதுவே கதோட்டுக் கதிர்ப்புகள் ஆகும்.





10,000 V-- 11,000 V அளவில் மின்னழுத்தத்தை 1 X 10 --3 Nm--2 அமுக்க வாயுவின்மீது செலுத்தியபோது, நீல, ஊதா நிற ஒளிர்வு அவதானிக்கப்பட்டது. இக்கதிர்களை கண்ணாடிக்குழாயொன்றின் மீது மோதிய போது, பச்சை ஒளிகள் தெரிந்தன.

J.J. Thomson ( 1856 - 1940 ) , Eugen Gold Stein (1850 - 1931 ) என்பவர்கள் இந்த ஆய்வுகளில் குறிப்பிடத்தக்கவர்கள்.

## இவற்றின் இயல்புகள்


இவைகள் மறையேற்றம் உள்ளனவாகும். ஏனெனில், மின்புலம் ஒன்றின் ஊடே செலுத்தியபோது, நேரேற்றப்பட்ட தகட்டை நோக்கி இவை திரும்பின. காந்தப்புலத்தின் ஊடே செலுத்தியபோது, மறை ஏற்றத்தைக் காட்டும் முறையில் திரும்பின. 'பிளெம்மிங்கின்' விதி மூலம் இவற்றை விளக்கலாம்.


ZnS திரை போன்ற ப்ளோரசன் பொருட்களின் மீது ப்ளோர் ஒளிர் வைக்கொடுத்தன. ஒளிப்படத்தாளை (Film) தாக்கும் இயல்புடையன.



தமது பாதையில் வைக்கப்பட்ட லேசான பற்கள் கொண்ட சில்லுகளை சுழற்றும் தன்மை உடையன. உந்துத்தன்மை, அல்லது திணிக்கும் சக்தி கொண்டன. திணிவும், ஏற்றமும் கொண்டவை என்பதால் இனிமேல் கதோட்டுத் துணிக்கைகள் என இவற்றை குறிப்பிடலாம்.

மேலும், இவற்றின் பாதையில் சிலுவை வடிவான ஒரு உலோகம், அல்லது தகட்டை வைத்துவிட்டால் அதன் நிழல் ஏற்படுவதை தெளிவாக காணலாம்.





காந்தம், அல்லது மின்புலங்களின் ஊடே இவை செலுத்தப்படும் போது ஒரே அளவால் திசை திரும்புகின்றன. தோம்ஸனின் ஆய்வு முடிவுகளின் படி, ஏற்றமுள்ள துணிக்கையொன்று அசையும் பாதையில் காந்தம், அல்லது மின்புலங்களை வைக்கும்போது அந்த துணிக்கைகள் தத்தமது ஏற்றம், திணிவு வீதத்திற்கு ஏற்ப திரும்பவல்லன. ஏற்றம் கூடும்போது திரும்பல் கூடும். ஆனால், திணிவு கூடும்போது திரும்பல் குறையும்.


கதோட்டுத் துணிக்கைகள் யாவும் ஒரேயளவில் திரும்புவது அவற்றின் ஒரு மாறிலி என்பதைக்காட்ட உதவியது. எல்லா மூலகங் களுக்கும் பொதுவானதும், மறையேற்றம் உடையதுமான ஒரு சாதாரண மான அடிப்படைத் துணிக்கை உண்டு என்றும், இதுவே இலத்திரன் என்றும் தோம்ஸனால் கூறப்பட்டது.

1. ஒரு துணிக்கையின் e/m துணிவதற்கான முறை தோம்ஸனால் காட்டப்பட்டது.


2.ஒரு துணிக்கையின் ஏற்றம் அறிவதற்கு வழிகாட்டியவர் 'மிலிக்கன்' என்பவர் ஆவார்.

**R.A.milikan** என்பவர் ஏறக்குறைய 1913 இல் ஒரு இலத்திரனில் ஏற்றத்தைத் தந்தவர் ஆவார். இவரது முறை **"oil drop method"** எனப்பட்டது.

" இரு உலோகத்தகளின் ஊடே நுண்ணிய பருமனுடைய நெய்த் துளிகள் வீசப்படும். இந்த நெய்த்துளிகள் X - கதிர்களால் மோதப்பட்டு இலத்திரன்களை சிதறடித்து நேர் ஏற்றம் செய்யப்பட்ட அயன்கள் ஆக்கப்படும்.உலோகத்தகடுகள் மின் செலுத்தப்பட்டு ஏற்றம் செய்யப்படும். இதன் மூலம் சிலதுளிகள் கீழேவிழும் அதே வேகத்திற்கு ஈடாக








மேன்முகவேகம் ஒன்று வழங்கப்பட்டு நிலை நிறுத்தப்படும். இத்தன்மை நெய்த்துளியின் அடர்த்தியிலும் நிலைமின்புலத்தின் வலிமையிலும் தங்கியுள்ளது."

இதன் மூலம் ஒரு நெய்த்துளியின் ஆகக்குறைந்த ஏற்றம் 1.59X10-19 C என்று அக்காலக்கட்டத்தில் கருதப்பட்டது. தற்போது அறியப்பட்ட பெறுமானம் **1.602x10-19 C.**

நன்றி :

**M.M.M.** மத்லூப்
அல் . அஸ்ஹர் ம . வி .
மன்னார்

( மாணவர் பகுதி தொடர்ந்து வரும் )



## கல்லடி பாலம் ( Lady manning Bridge ).

கிழக்கின் பக்கம் பார்வைஂயை ஈர்க்கும் காட்சிகளில் ஒன்று .. நாட்டின் மிக நீளமான பாலமொன்றாக தன்னை பதிவு செய்துகொண்டிருக்கிறது.

தெற்குப்பகுதி இடங்களிலிருந்து மட்டுநகருக்குள் செல்லும் நுழைவாயிலாக பாவிக்கப்படும் இந்த பாலம் கல்லடியில் நிர்மாணிக்கப்பட்டது. பிரதானமான போக்கு வரத்து மார்க்கம் இதுவாகும்.

பாடும்மீன்களுக்குப் பேர்போன இப்பாரிய நீர்ப்பகுதியை கடந்துசெல்லும்போது பிரமிப்பாக இருக்கும். நேர்த்தியும் , உறுதியும் கொண்டு அந்தக்கால நிர்மாணிப்பு நுட்பத்தை சரித்திரமாகக் காட்டுகிறது இந்தப்பாலம்.



மிக நீளமான இந்தப்பாலத்திற்கு இன்னொரு பிரபல்யமும் உண்டு.

மட்டக்களப்பு என்றாலே 'மீன்கள் பாடுகின்ற ஊர்' என்பது உலகறிந்த கதை. அந்த மீன்களிடம் இருந்து வரும் சங்கீதத்தை இந்தப்பாலத்தில் இன்னும் நன்றாகக்கேட்கலாமாம்.

பௌர்ணமி நாட்களில் விஷேசம் ஒருபடி மேல் ..


அழகிய நீலநிற நீர்ப்பரப்பாக விரிந்துகிடக்கின்ற கடலின் மீது செல்லும் இப்பாலத்தின் தோற்றம் கருத்தைக்கவர்ந்திழுக்கும். பகலில் பார்த்தால் அசரவைக்கும். இரவிலோ பாலத்தின் மின்விளக்குகள் பாய்ச்சும் ஒளிவெள்ளம் கீழே தண்ணீரில் பட்டுத்தெறித்து, அந்தப்பகுதியையே பிரகாசிக்க வைக்கின்றது. அதுவும் தூரத்திலிருந்து பார்த்தால் சொர்க்கலோகம்தான்!

ஆனால் சமீபத்தில் இந்த கல்லடி அழகுப்பாலம் திடீரென்று எல்லோரையும் மிரளவைத்து விரட்டியடித்து. மழையினால் பாரிய வெள்ளம் உடைப்பெடுத்து பாலத்தை முட்டிக்கொண்டு ஓடியது வழக்கமாகப்பார்த்த காட்சி... ஆனால் இம்முறை ஓடிய வெள்ளத்தில் கலர் கலராக பாம்புகள் நீந்திக்கொண்டிருந்தன .. அதுவும் ஆயிரக்கணக்கில்! உல்லாச நடமாட்டத்திற்காக நாடி வந்து கொண்டிருந்த மக்களை இந்தமுறை நன்றாக மிரட்டி வைத்து விட்டது இந்த மெகா பாலம்!



khzth;

# குறுக்கெழுத்துப்போட்டி..



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ |
| | 3 | | ■ | 4 | |
| 5 | | ■ | 6 | | ■ |
| ■ | 7 | 8 | | | ■ |
| ■ | ■ | | | ■ | 9 |
| 10 | | | ■ | 11 | |

,lkpUe;J tyk; :



(1) பிள்ளைகளுக்கு விருப்பமான செயல்
(3) மண்ணில் செய்யப்பட்ட பொருள்
(4) உயிருக்கு ஒத்த சொல்
(5) மழை பெய்தால் இதை தேடுவார்கள்
(6) விலங்குகள் இங்கே நடமாடும்
(7) விமானம் செல்லும், தொட முடியாது
(10) கடந்த நாள் இது
(11) கடலின் எல்லை இது





NkypUe;J fPo; :

(1) எரிபொருள்களில் ஒன்று
(2) இந்த விலங்கின் மூக்கு கையில்
(4) மழை வந்தால் மயில் என்ன செய்யும்?
(6) இரத்தம் வெளிப்படும் இடம்
(8) இது இல்லாத இடம் இல்லை
(9) பாதியை இப்படியும் கூறுவார்கள்

விடைகளை இதே கூப்பனில் எழுதி

கத்தரித்து, தபால் அட்டையில் ஒட்டி அனுப்பவும்.

தபால் உறையுள் இட்டு அனுப்பவேண்டாம்.
முற்றிலும் சரியான விடையை அனுப்புபவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தெரிவாவர். அவர்களுக்கு முறையே ரூபா 200, 150, 100 வீதம் வழங்கப்படும்.



அனுப்பவேண்டிய முகவரி :
மாணவர் குறுக்கெழுத்துப்போட்டி
'நெஞ்சமே ..'
555, புதுத்தெரு,
மன்னார்.

நன்றி கவிஸ்ரா ரவீந்திரன்
(ஆசிரியை)



"இப்பத்தான் உன்ற மனுஷி கோயிலால வந்தவ .. மறுபடியும் போறாப்போல.."

"பொங்கலுக்கு ரெண்டு சாரி எடுத்துப்போட்டா .. அதக் காட்டத்தான் .."

*பொங்கலோ பொங்கல்..!*



"பொங்கலுக்கு நீ மாமனார் வீட்டுக்கு வரும் போதெல்லாம் 'டல்' லா இருக்கியே ஏன் ..? "

" பொங்கலுக்குத்தான் அழைப்பு .. தீபாவளிக்கெல் லாம் கூப்பிடமாட்டாங்க .."



" நீங்க சேர்ட் வாங்கும்போது இன்னொரு சுரிதாரும் வாங்கி டுங்க.. அப்படியே, அகிலா வுக்கு ப்ளவுஸ் துணியும், அம்மாவுக்கு பச்சை நிறத்துல சாரியும் .. "

" பொங்கலுக்கு எனக்கு சேர்ட் வேண்டாம் .."




"அட, விக்கட் டிசைன்ல முறுக்கு செய்திருக்கீங்களே!"

" ஓமோம் .. பொங்கலுக்கு முரளி வீட்டுக்கு வாரார்"

.."*பொங்கலோ பொங்கல்..!*





" பகவானே .. நிவாரண அரிசியிலதான் பொங்கியிருக்கிறோம் .. அதுக்காக உன்னை அகதி யென்டு நினைக்காமல் ஏற்கவேண்டும் சுவாமி .."



"யாரப்பா நீ..? பொங்கலும் அதுவுமாக பெட்டியோடு வந்து நிற்கிறாய் ..? "

"எல்லாவற்றையும் துறந்து வந்துவிட்டேன் சுவாமி..! பொங்கல்செலவு அதிகம்.. என்னை சீடனாக ஏற்கவேண்டும் "



# ஒன்றே குலம்..!

'உர்' ரென்று வெளிச்சத்தோடு சீர்வானம் ஜன்னலோரமாய் பறந்தபோது திடுக்கிட்டு கண்விழித்தான் கரீம்.

அவன் படுத்திருப்பது அநுராதபுரம் ஆஸ்பத்திரியில்.

எலிக்காய்ச்சலாம், ஊர் ஆஸ்பத்திரியில் கைவிட்டுவிட்டார்கள்.

"உம்மா .. வாப்பா கொண்டுவந்தாரா ..? " ஈனஸ்வரத்தில் கேட்டான்.

"இன்னும் வரல மவன் .. நாளைக்கு நத்தார்தானே, யாவாரம் முடிஞ்சிதான் பஸ் எடுத்திருப்பார்...லேட்டாகும் " மகனை சமாதானப்படுத்தினாள் ஷெரின். அழுது அழுது அவளின் குரல் கம்மியிருந்தது.

அவளுக்குத்தெரியும்-- இன்று அவர் வரமாட்டார். கணவன் சலீம் ஏழை நடைபாதை வியாபாரி. கிறிஸ்மஸ் வியாபாரம் ஊரில் களைகட்டியிருக்கிறதாம்.

சற்றுமுன் டொக்டர் வந்துபோன பிறகுதான் ஷெரினின் துக்கம் அதிகரித்திருக்கிறது.

'கேட்கிறத வாங்கிக்கொடுங்க' என்று சொல்லிவிட்டு நடந்தபோது அவர் சந்தோஸமாக இல்லை. இன்றுகூட இதே வார்டில் இரண்டுபேர் இந்த காய்ச்சலில் இறந்துபோனார்கள்.

"என்னோட சைக்கிள் .." மீண்டும் கரீமின் உலர்ந்த உதடுகள்.

மகன் குட்டிச்சைக்கிள் வாங்கிக்கேட்டபோதெல்லாம் சமாளித்து வந்தார்கள். ஆனால் இன்றைய நாள் அவனுடையது. எப்படியும் சலீம்நானா கொண்டுவர வேண்டும்.. ஆனால் நாளையோ, மறுதினமோ தான் சாத்தியம். 'அதற்குள் கரீமுக்கு ஏதாவது .. அல்லாவே !"





நினைக்கும்போதே ஷெரினின் நெஞ்சு அடைத்தது.

கரீமின் கண்கள் மெதுவாக மூடிக்கொண்டன. நேரம் நள்ளிரவை நெருங்க பட்டாஸ் சத்தங்கள் அதிகரித்தன. வார்டுக்குள் அமைதி. நேர்ஸ்மார்களின் பூட்ஸ் ஒலிகள் மட்டும் லேசாக கேட்கும் நிலையில் ஷெரினாவும் கதிரையிலேயே உறங்கிவிட்டாள். பாவம் ! அவள் தூங்கி மூன்றுநாட்களாகிறது.

நள்ளிரவு கடந்திருக்கவேண்டும். ஏதோ மெல்லியஒலி காதில் விழ கண்விழித்தாள் ஷெரின். வெளியேறும் மெல்லிய பூட்ஸ் ஒலிகேட்டது. 'நேர்ஸ் செலைன் போத்தல் மாற்றியிருப்பாள்' என்று நினைத்தபடி சட்டென்று கரீமை பார்த்தாள். அவன் தூக்கத்தில் இருந்தான். அருகில் புதிய சின்னசைக்கிள் நிறுத்தியிருந்தது.

'அட, வந்திட்டுப்போனாரா..! இண்டைக்கு ஏலாதென்டாரே.." ஆச்சரியம் தாங்கவில்லை ஷெரினுக்கு. 'ஆனா இந்த நேரத்தில எப்படி உள்ள விட்டாங்க..!' யோசித்தபடி கரீமை எழுப்பினாள் "கரீம்..மவன்.. .இங்க பார், வாப்பா வந்து வச்சிட்டுப்போயிருக்கார்.."

கண்ணைக்கசக்கியபடி தலையைத்திருப்பிய கரீமின் பார்வையில் ஏகப்பட்ட சந்தோஸம்!.

ஷெரினின் தலைக்குமேலே கூரையிலிருந்து திடீரென ஏதோ புறப்பட்டமாதிரி இருந்தது. ஏதோ பறவை இருந்துவிட்டுப் பறக்கிறது என்று நினைத்தாள்.

மறுநாள் --

" ஹலோ ஷெரினாவா ..? கரீம் எப்பிடி இருக்கான்..? அவனிடம் கொடு.." பாசக்கொடுமையில் தவித்தார் சலீம் நானா.


" ஹலோ.. எனக்கு நல்லா இருக்கு வாப்பா..! நீங்க ராத்திரி வந்து தந்திட்டுப்போன சைக்கிள் சூப்பர்.. ஏன் நிக்காம போயிட்டீங்க? தேங்க்ஸ் வாப்பா.."

அதிர்ந்தார் சலீம் நானா. 'நான் எப்ப போனேன்..சைக்கிள் குடுத்தேன்..' புரியாமல் நின்றார்.

தூரத்தில் ஒரு மாதாகோயிலின் கூரைக்குள் மான்வண்டியை நிறுத்திவிட்டு அருகில், 'நைட் ட்யூட்டி' பார்த்த களைப்பில் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தார் சந்தா குளாஸ் --

வெடியோசைகள் காதைப்பிளப்பதுகூட தெரியாமல்.





# வாசகர் பரிசுப்போட்டி!

## ரூ.2500|=

'நெஞ்சமே..'

இந்த இதழில் என்னைக்கவர்ந்த பகுதி

தலைப்பு :
காரணம் :

பெயர் :
முகவரி : தொலைபேசி :

ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
கருத்தைக்கவரும் அனைத்துமே போட்டியில் கலக்கும், பரிசுகளை அள்ளிச்செல்லும்.

முதல் பரிசு : 1000.00
2 ம் பரிசு : 500.00
3 ம் பரிசு : 300.00

ரூ. 100.00 வீதம் ஏழு ஆறுதல் பரிசுகள் !

அனுப்பவேண்டிய முகவரி :

வாசகர் பரிசுப்போட்டி,
'நெஞ்சமே ..'
இல: 555 , புதுத்தெரு,
மன்னார் .



'நெஞ்சமே ..' தனது முதல் அறிமுகத்திலேயே வாசகர்களை கவர்ந்திருக்கிறது என்பதையிட்டு அளவற்ற சந்தோசம் கொள்கிறது. இப்படியொரு பெருமையை இந்த சாதாரண சஞ்சிகைக்கு வழங்கி ஆதரித்த வாசகர்களை நன்றியோடு வணங்குகிறோம் ..

பல நூற்றுக்கணக்கான கடிதங்கள் வாழ்த்தியும், பாராட்டியும், ஆதரித்தும் வந்து குவிந்தன. நேரிலும் சந்தித்து ஊக்கமளித்தனர். நன்றி.

'வாசகர் பரிசுப்போட்டி'யில் பங்குபற்றிய வாசகர்களின் திறமையை நினைத்தால் எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா..? அத்தனை விஷயங்களிலும் அளவற்ற ஞானமும் , ரசனையும் மூலைமுடுக்கெல்லாம் நிறைந்து கிடந்தன. அதுமட்டுமல்ல, அவர்களின் ஆக்கங்களில் ஷெல்லியிலிருந்து சுஜாதா வரை முகம் காட்டுகிறார்கள். புதிய உலகிற்கேற்ற புதுமை எழுத்துக்கள் தர தயாராகிவிட்டார்கள்.


அத்தனை போட்டியாளர்களின் ரசனையும் **A ..One !!**


திறமைசாலிகளில் அதிர்ஸ்டசாலிகள் இவர்கள் :

1 ஆம் பரிசு : வே.சந்திரகலா , கள்ளிக்குளம் , அடம்பன்
2 ஆம் பரிசு : எம். மணிமேகலா , டிறேட்டன் டி11,கொட்டகல
3 ஆம் பரிசு : அஸ்ரா , 2 ஆம் வட்டாரம், எருக்கலம்பிட்டி

ஆறுதல் பரிசு பெறுவோர்:

- ந. கஜேந்தினி , குருவளை , அளவெட்டி தெற்கு
- முகமட் சுகையில் , ஜின்னாநகர் , திருகோணமலை
- ஜே.ஜே. சோசை , 1 ஆம் வட்டாரம் , வங்காலை
- கே.எல். அப்துல் றசூல், 3 ஆம் குறுக்குத்தெரு,நிந்தவூர்
- ம.சுலோஜினி, மகளிர் கல்லூரி , மட்டக்களப்பு
- சி. சுகந்தினி , சென் அந்தனிஸ் மாவத்தை, கொழும்பு13
- தயாபரன் மதுஷா , தாவடி தெற்கு , தாவடி





# இ கணனி ..!?

இன்டர்நெர் என்றால் தமிழில் இணையம் என்று அறிவோம்

கணனிகளில் தகவல் பரிமாறிக்கொள்ளவும், பெறவும் உதவி செய்யும் அமைப்பையே இணையம் என்று கூறுவர். இது உலகின் எல்லா இடங்களையும் இணைக்கிறது. சுருக்கமாக 'நெற்' என்றும் அழைக்கிறார்கள்.

'ஈ மெயில்' சிஸ்டமெல்லாம் கூட இதற்குள் வருவதால், கடிதங்கள், போட்டோக்கள் என்று ஒரு நொடியிலேயே அனுப்பிவிடலாம்.

அதுவும் உலகம் முழுக்க.

'வெப்' என்று சொல்லப்படுகிற இணையத்தளங்களை உருவாக்கி, சகல தகவல்களையும் சேகரித்து வைத்துக்கொள்ளலாம்.

வீட்டில் இருந்தபடியே உலகின் அந்தப்பக்கம் இருக்கிறவர்களோடு நேரில் பார்த்துப் பேசக்கூடியவாறு 'ஸ்கைப்' வசதிகளும் உள்ளன.

'வெப்' கெமரா என்ற புகைப் படக்கருவியின் மூலம், முகம் பார்த்துக் கதைக்கும் இந்த வசதி சாத்தியமாகிறது.

அன்றாட நடவடிக்கைகளில் கூட 'நெற்' வசதியைப் பயன்படுத்தி நேரத்தை மிச்சப்படுத்தி விடலாம். பேங் பலன்ஸ், ட்ரெய்னுக்கு டிக்கட், பிளேன் டிக்கட் புக்கிங், ஹொஸ்பிடல் விபரங்கள் போன்ற தேவைகளுக்கு அலைச்சல் இல்லாமல் இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

தேவைப்படும் பொருட்களை வாங்கும் இடங்களை அறிந்தும்,



விலைகளை பார்த்தும் வாங்கிக்கொள்ளலாம். பாடல்கள் கேட்பது, படம் பார்ப்பதிலிருந்து வியாபாரம் செய்வது வரை 'இன்டர் நெற்' ஐ பயன்படுத்தலாம்.



ஆரம்பத்தில் அமெரிக்காதான் தனது பாதுகாப்புக்கென்று கணனிகளை இணைத்தது. ARPANET என்று அதற்கு பெயர். இதனால் ஏற்பட்ட நன்மைகளைப் பார்த்துவிட்டு நிறுவனங்கள், யுனிவர்சிற்றிகளும் தங்களுக்குள் இந்த இணைப்பு வசதிகளைக்கொண்டு வந்தன.

ஆரம்பத்தில் சிக்கல் ஏற்பட்டதால் இரண்டு அமைப்பாக பிரித்து செயல்பட்டார்கள். MILNET / ARPANET என்று பெயர் இருந்தன. தொடங்கும்போது 135 கணனிகள்தான் இணைப்பில் இருந்தன. ஆனால் அடுத்த ஒரு வருஷத்திலேயே 3000 இணைப்புகளுக்கும் மேல் வந்தன.

அதுவும் 1993 ம் ஆண்டிலேயே!

**இணையத்தளத்தில் நுழைவது ..**

இப்பொழுது WWW முறையில் இலகுவாக நுழைகிறோம். முன்பு அப்படி இல்லை. சிக்கல் இருந்தது. WWW என்றால் world wide web என்று டிம் பெர்னர் என்பவர் 1991 இல் கண்டுபிடித்தார்.

இதன்பிறகே ஆயிரம், லட்சம், என்று வளர்ந்து இப்பொழுது கோடிக் கணக்கில் கணனிகள் இணையத்தளத்தில் இணைக்கப்பட்டு விட்டன. இதில் இரண்டு வகை இருக்கும். LAN என்று ஒன்று. LOCAL AREA NETWORK குறிப்பிட்ட அளவு கணனிகளுக்கு மட்டும் தேவைப்படும் அளவு தகவல்களைப்பரிமாறிக் கொள்வார்கள்.

இரண்டாவது வகை WAN -- WIDE AREA NETWORK இந்த இணையத்தை டெலிபோன் கனெக்ஷன் மூலம்தான் பாவிக்க முடியும்.

**'ஹோம் பேஜ்' என்றால் ..**

இன்டர் நெற் றினுள் நுழைவற்கு இன்டர் நெற் எக்ஸ்ப்ளோரில் டபுள் க்ளிக் பண்ணினால், வெறுமையான ஸ்கிரீன் வருகிறது. அதில் தான் நாம் முகவரியை டைப் செய்கிறோம். அதைவிட சுலபமாக இன்டர் நெற் எக்ஸ்ப்ளோரில் டூல்ஸ் உடன் Internet Option இல் போய் அதில் இருக்கும் ' ஹோம் பேஜ் ' இடத்தில் நமக்குத்தேவையான முகவரியை அடித்து சேமித்து விட்டால்

ஒவ்வொரு முறையும் ஆரம்பத்திலே யே திறந்திடும். இதைத்தான் 'ஹோ ம் பேஜ்' என்கிறார்கள்.

**H T M L என்றால் ..**

**Hyper Tex Mark up Language** இதைத்தான் **`HTML`** என்று சுருக் கமாகச் சொல்வார்கள். இந்த மொழி யைப் பாவித்தே புதிய 'வெப்' தளங் களை உருவாக்குவார்கள்.

**ஹைப்பர் லிங்க் என்பது ..**


**Hyperling** நாம் இருக்கின்ற 'வெப்' தளத்திலிருந்து பல்வேறு 'வெப்' முகவரிகளுக்கும் போவதற்கு பயன்படுத்தப்படுவது. ஒரு 'வெப்' தளத்தில் நிறைய 'வெப்' கள் இரு க்கும் அல்லவா..

**இன்டர் நெற் கனெக்ஷன் பெறுவது ..**

சில நிறுவனங்களின் மூலம் இதனைப்பெறவேண்டும். **I S P** என்று இந்த நிறுவனங்களை அழை ப்பார்கள். இன்டர் நெற் இணைப்பு **soft ware** நமது கொம்ப்யூடரில் நிறுவப்படும். இதற்கு பணமும் செலு த்த வேண்டும்.


**USER NAME .. PASSWORD ..?**

இன்டர் நெற் உபயோகிப்பவர் இந்த இரண்டையும் பாவித்துத்தான் அதைத் திறக்கமுடியும். இவைக ளையும் **Phone Number** உடன் முன்கூட்டியே நாம் தயாரித்து வைத் திருப்போம்.





" இந்தமுறை 'கிப்ட்ஸ்' அதிகமா ஓடர் குடுக்கனும் .. முகாம் பிள்ளைகளோட 'லிஸ்ட்'டும் கிடைச்சிருக்கு .."



இந்த தகவல்களைக் கொடுத்து பிரவுசரில் நுழைந்தால்தான் நாம் இன்டர் நெற் றை பாவிக்கலாம். முக்கியமாக பாஸ் வேர்ட் , யூசர் நேம் இரண்டையும் ரகசியமாக வை த்திருக்க வேண்டும்.

**மேலும் அடிப்படையாக ..**


**I S P** நிறுவனங்கள் இப்பொ முது நிறைய இருக்கின்றன. **VSNL , HCL** பிரபலமான இடங்கள்.

டொமைன் பற்றியெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இதன் கணிப்பொறிகள் நெற் வேர்க்கில் இணைக்கப்பட்டிருக்கும். சில குறிப்பிட்ட வேலைகளை இது பார்த் துக்கொள்ளும்.

இன்டர் நெற்றில் ஐ பி முகவரியாக 'டொமைன் இருந்தால் தான் இணையத்தளங்களை நாம் திறக்கமுடியும். ஐ . பி . முகவரியி லும் பல பகுதிகள் உண்டு. ஒவ் வொரு பகுதிக்கும் இப்படியான முக வரிகளை வைத்தே இன்டர் நெற் முகவரி திறக்கப்படுகின்றது. இன்டர் நெற் டொமைன்களை ஐ.பி. அமைப் புதான் முகவரியாக மாற்றுகிறது.

ஒரு தகவல் அனுப்புபவ ரும், பெறுபவரும் 'இன்டர்நெற்' றில் பரிமாறிக்கொள்ளும்போது..

அதை **Protocal** என்று சொல் வார்கள். **TCP -- Transmission Control Protocal** , இன்டர் நெற்றில் கொடுக்கும் தகவல்களை பகுதிக ளாக பிரித்து, ஒவ்வொன்றுக்கும் **Pocket** ஏற்படுத்தி, ஒரு இலக்கமும் இருக்கும். இதுதான் **TCP** இதன்படியே தகவல் அந்தந்த இடங் களுக்குப் போகும்.





இன்டர் நெற் முகவரியில் கடைசி மூன்று எழுத்துகள் இருக்கும். அது ஒவ்வொரு வகையையும் குறிக்கும்.

உதாரணமாக –

**com** --- வர்த்தகம்
**edu** --- கல்வி
**gov** --- அரச அலுவல்
**net** --- இணைய இடங்கள்
**org** ---நிறுவனங்கள்
**mil** ---இராணுவ சம்பந்த ..
**int** ---சர்வ தேச ..

அடிப்படை அறிவுக்கான சிறு பகுதிதான் இவை – மேலும் விளக்கப் பகுதிகள் தொடர்ந்து வரும்.





" நேர்ஸ் , கெதியா இனடர்நெற்ற ஓபன் பண்ணி

' WWW Surgery , Com .. இல ஈரல் பகுதியில ரத்தம் வந்தா என்ன செய்யிறதின்னு பாத்துச் சொல்லு .."





யாத்திரீகர் தங்கும் விடுதி..
இலங்கை வங்கியின் அன்பளிப்பு !

நாடெங்குங்குமிருந்தும் மடு அன்னையை தரிசிக்க வரும் அடியார்கள் நலன்கருதி விடுதி ஒன்றை நிர்மாணிக்க இலங்கை வங்கி முன்வந்துள்ளது. இதனை நேரடியாகசென்று ஆரம்பித்து வைத்த பொது முகாமையாளர் - திரு. B.A.C. பெர்னாண்டோ அவர்கள், ரூபா 3,000,000 பெருமதியான காசோலையை மடு பரிபாலன குருவானவரிடம் கையளித்தார். விடுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியும் ஒழுங்குசெய்யப்பட்டது.

200 விவசாயக்கடன்கள்!
இலங்கை வங்கி உதவி

மன்னார் பண்டிவிருச்சான் விவசாய அமைப்புடன் கலந்துரையாடிய இலங்கை வங்கியின் பொதுமுகாமையாளர் திரு. B.A.C.பெர்னாண்டோ அவர்களும், • ஊழியர்களும் மேற்படி கடனுதவிக்கு வழி சமைத்தனர். யுத்தத்தில் இருந்து மீண்டிருக்கும் விவசாயக்குடும்பங்களுக்கு இது பெரிதும் ஆறுதல் தருகிறது. இதே பகுதியில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இருந்து நடமாடும் வங்கி சேவையையும் அளிக்கிறது இலங்கைவங்கி.





750 பிள்ளைகளுக்கு
இலங்கை வங்கி பயிற்சிப்பட்டறை..



மன்னார் மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சைக்குத் தோற்றிய பிள்ளைகளுக்கு 'மன்னார் சித்தி விநாகர் இந்து தேசியப்பாடசாலையில் கருத்தரங்கும், பயிற்சியும் அளிக்கப்பட்டன. இதனை நடாத்திய இலங்கை வங்கி, 2010 ஆண்டில் முதல் நிலையில் சித்தியடைந்த 10 மாணவர்களுக்கு 10,000 ரூபா வீதம் பரிசு வழங்கியது. நிகழ்வில் கலந்து சிறப்பித்த மன்னார் வலயக்கல்வி அதிகாரி திரு. ஆபெல் றெவல் அவர்கள் பரிசில்களை வழங்கினார்.

## ஊர் நியூஸ்..!



### மன்னாரில் காய்ச்சல் மரணங்கள்..!

மழை,வெள்ளம் என்ற
வழக்கமான சாக்குப்போக்கில்
தொற்று நோய்கள் மக்களைப்
பதம்பார்த்து வருகின்றன.இந்த
நிலையில் மன்னார் மாவட்டத்
தில் பரவிய புதிய விஷக்காய்
ச்சல் ஒருபக்கம் பலரது உயி
ரைக்குடித்துவிட்டது. கடந்த
சிலவாரங்களில் மட்டும் ஆறு
பேருக்குமேல் மரணமாகியதோ
டு, மேலும் பலர் வைத்தியசா
லையில் உயிருக்குப்போராடினர்
எலிக்காய்சல், பன்றிக்காய்ச்ச
ல் என்று மர்மப்பெயர்களால்
அழைக்கப்படும் இது உண்மை
யில் எந்தவகை காய்ச்சல் என்
றே தெரியாமல் உறைந்து
போய் இருக்கிறார்கள் மக்கள்.

ஹெல்த் சம்பந்தப்பட்ட அதி
காரிகளின் துரித நடவடிக்கை
கள் மட்டுமே இதனை கண்டு
பிடிக்கவும், கட்டுப்படுத்தவும்
முடியும் என்று அங்கலாய்க்கி
றார்கள் மன்னார் மக்கள்.

*"Please Pay Your Attention Sirs...!"*



### குப்பை போடுவது குற்றச்செயல் ..!

வீதிகளில் குப்பைகளை
அலட்சியமாய் வீசிவிட்டுப்
போய்க்கொண்டிருந்தவர்கள்
விஷயத்தில் இப்பொழுது அதி
ரடியாய் இறங்கிவிட்டது ..மன்
னார் பொலிஸ் படை!

நவீனமடைந்துவரும்
பொலிஸ் அணிகளின்கண்ணில்
மண்ணைத்தூவிவிட்டு
துண்டுக்காகிதத்தைக்கூட வீதி
யில் போட்டாலும் "அரெஸ்ட்"
தான் ..

பெருமளவு குற்றச்செயல்
கள் கட்டுப்பாட்டிற்குள் வந்திரு
க்கும் நிலையில், பொலிஸ்
அணிகளின் உஷார் தன்மை
இந்த விஷயத்தில் சரியாக
பயன்படுத்தப்படுவதாக மக்கள்
மகிழ்ந்து போகிறார்கள்.

நகரசபை 'ட்ரெக்டர்'
'களுக்காக காத்திருந்து, 'கரெ
க்ட்' டாக ஒப்படைத்துவிட வே
ண்டும் குப்பைகளை.

மாறாக..பழக்கதோஷத்தில்
குப்பைகளை அப்பிடி இப்பிடி
போட்டீர்களானால், அப்புறம்
கைது, ரிமாண்ட், கோர்ட், தண்
டம் என்று சீரழிந்து நீங்களே
குப்பையாக கசங்கி வீடு வந்து
சேர்வீர்கள் ..கவனம் !



### வங்கிகள் அதிகரிப்பு!

மூன்று தேசிய வங்கிகளும்
ஒரு தனியார் வங்கியுமே
இயங்கிவந்த மன்னார் நகரில்
இப்பொழுது பெருமளவு வங்கி
கள் முளைத்துவிட்டன.

போருக்குப்பின் மன்னாரை
நோக்கிப் படையெடுத்த
வர்த்தக போட்டியாளர்களில்
இந்த புதிய வங்கிகளே அதி
கனவில் கவனத்தை ஈர்க்கின்
றன...

யூனியன் வங்கி, கொமர்
ஷியல் வங்கி, சம்பத் வங்கி,
செலான் வங்கி உட்பட வகை
தொகையான நிதிநிறுவனங்
கள் நகரில் சுறுசுறுப்படைந்
துள்ளன.

'மன்னாரா..! அங்கேயா ..!'
என்று ஏதோ அந்தமான்
தீவைப்போல தூர வைத்துப்
பார்த்த கண்களுக்கு இப்பொ
முதுதான் அதன் வளம் தெரி
கிறாக்கும் ..

'ஹும்.. எல்லாம் நேரம்! "

## ஊர் நியூஸ்..!



### ராட்சத மீன்கள்! மன்னார் கடலில்..

பாரிய ராட்சதமீன்கள் இரண்
டு மன்னார் பெருங்கடலில் மீன
வர் வலைகளில் சிக்கின. 'கடல்
பன்றி ' என்று அழைக்கப்படும்
இந்த மீன்களின் தலை பன்றி
யைப்போலவும், உடல் மட்டும்
மீன்வடிவமாகவும் காணப்பட்டது.

ஆசிய சமுத்திரப்பகுதிகளில்
வாழும் இந்த அதிசய மீனினம்
குறிப்பிட்ட காலநிலையிலும்,
இனப்பெருக்க நேரங்களிலும்
தாழ்வு கடல்பகுதிகளை நோக்கி
நீந்திவரும் வேளைகளில் மன்
னார் மீனவர் கண்களில் தென்படு
கின்றனவாம். பிரமிக்கவைக்கும்
மலைபோன்ற இந்த இரண்டு மீன்
களும் கடற்படையினரால் கொண்
டு வரப்பட்டு, மன்னார் பொலிஸ்
நிலையத்தில் பொதுமக்களின்
பார்வைக்காக வைக்கப்பட்டன.
பின்னர் நீதிமன்றுக்கு ஏற்றிச்செ
ல்லப்பட்டு, நீதவான் உத்தரவின்
பேரில் ஆய்வுக்காக கொழும்பு
அனுப்பப்பட்டன.

இந்த மீன்களைப்பார்த்த சந்
தோஷம், சிறுவர்களுக்கு கிறிஸ்
மஸ் பரிசாக அமைந்தது.



# கமகம சமையல் பக்கம்



## சேமியா இட்லி

தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| சேமியா | - 150 கி |
| பாலாடை | - 150 மி.லி. |
| பச்சை மிளகாய் | - 2 |
| இஞ்சி | - சிறிதளவு |
| கடுகு | - கால் தேக்கரண்டி |
| சீரகம் | - கால் தேக்கரண்டி |
| பெருங்காயத்தூள் | - ஒரு சிட்டிகை |
| உப்பு | - தேவையான அளவு |
| கறிவேப்பிலை | - தேவையான அளவு |
| கொத்தமல்லித்தழை | - அலங்கரிப்பதற்கு |
| எண்ணை | - தேவையான அளவு |



செய்முறை

ஒரு அகண்ட பாத்திரத்தில் சேமியா, பாலாடை (அ) தயிர் மற்றும் உப்பு நன்கு கலக்கி வைத்துக்கொள்ளவும். தாச்சியில் எண்ணையை ஊற்றி கடுகு, சீரகம், பெருங்காயத்தூள் மற்றும் கறிவேப்பிலை போட்டுத் தாளிக்கவும். இத்துடன் பொடியாக நறுக்கிய இஞ்சி மற்றும் பச்சை மிளகாயைச் சேர்த்து வதக்கவும். இதனை சேமியா கலவையில் சேர்த்துக் கலக்கவும். இத்துடன் சிறிதளவு தண்ணீர் சேர்த்து, 15 நிமிடங்கள்வரை ஊற வைக்கவும். பிறகு இக்கலவையினை இட்லி தட்டில் ஊற்றி வேக விடவும். வெந்ததும் இட்லியின் மேல் கொத்தமல்லித் தழை வைத்து அலங்கரித்து, குழந்தைகளுக்குப் பிடித்த சட்னி வைத்துப் பரிமாறலாம்.





" தண்ணிக்கு மேல என்ன அடையாளப் பலகையா இருக்கு? "

" வீடெல்லாம் தண்ணிக்கு கீழே .. வீட்டுக் காரங்க அடையாளம் குத்தி வச்சிருக்காங்க''






" நேத்து மழைன்னு காசு கட்டலை சரி .. இப்ப 'ஒரு மாசம் கழிச்சுத்தான் வரு வேன்'கிறீங்களே ..!"

ஏன்னா , வெள்ளம் வடிய நாளாகுமே ..! "




''முக்கிய அறிவித்தல்..! வெள்ளத்தில் மிதந்து வரும் வீடுகளை யாரும் தமது காணிகளுக்குள் அடைத்து வைத்தால் கைது செய்யப் படுவீர்கள் .."





# கிராமத்தில் சுயதொழில் ..!

## அரிசி வடகம் ..!

### தேவையான பொருட்கள் :

| | | |
|---|---|---|
| பச்சை அரிசி | : | 3 கிலோ |
| பெருங்காயம் | : | 20 கிராம் |
| சீரகம் | : | 20 கிராம் |
| மிளகாய் | : | 30 கிராம் |
| புளித்த தயிர் | : | 500 மில்லி |
| உப்பு | : | சிறிதளவு |

### தயாரிப்பு முறை :

முதலில் பச்சை அரிசியை சுத்தப்படுத்தி, கல் நீக்கி தண்ணீரில் ஊற வைக்கவும். நன்கு ஊறியதும் அரிசியை கிரைண்டர், அல்லது ஆட்டுக்கல்லில் இட்டு நன்றாக



அரைத்துக்கொள்ளவும். நன்கு அரைத்ததும், ஒரு பாத்திரத்தில் எடுத்து, அதில் உப்பைப்போட்டு மூடி வைக்கவும்.


அடுத்தநாள் மிளகாய், பெருங்காயம், சீரகம் இவற்றை அரைத்து தயிருடன் சேர்த்து அரைத்து வைத்த மாவுடன் நன்கு கலக்கவும். பின் மாவை அடுப்பில் ஏற்றி சூடாக்கவும். தண்ணீர் வற்றி பசை போல் வரும் வரை சூடாக்கி, நன்கு கிளறிக் கொண்டிருக்கவும்.


மாவு பசைபோல் ஆனதும் அடுப்பில் இருந்து இரக்கிவிடவும். சூடு ஆறியதும் பெரிய சுத்தமான வெள்ளைத் துணியை விரித்து , மாவினை வடகம் செய்யும் அச்சில் போட்டு பிழிந்து, இரண்டு மூன்று நாட்களுக்கு வெயிலில் காய வைக்கவும்.

நீர் வடிந்து வடகம் நன்றாக காய்ந்ததும் துணியில் இருந்து வடகத்தை எடுத்து விடவும். வடகம் துணியில் ஒட்டிய பகுதியில் ஈரம் இருப்பின் எடுத்த வடகத்தை இனனும் ஒருநாள் வெயிலில் காய வைக்கவும்.


காய்ந்ததும் எடையிட்டு, பொலித்தீன் பைகளில் அடைத்து விற்பனைக்கு அனுப்பவும்.

அப்பளத்தைப்போலவே வடகமும் விரும்பி உண்ணக் கூடிய பொருளாகும். வேப்பம்பூக்களும் சேர்த்து செய்யும் வடகங்கள் உடம்புக்கும் நல்லது. நன்கு விற்பனையா வதோடு, குறைந்த முதலீட்டில் லாபம் தரும் தொழிலாக அமையும் நெஞ்சமே ..





# சாதனைப்பாடசாலைகள்!



சாதனைப்பாடசாலைகள்!

வேகமாகச் சென்ற அந்தப் பந்து வலைக்குள் நுழைந்து கோலாக மாறியபோது அரங்கு அதிர்ந்தது!

மின்னலாக செயல்பட்ட முன்வரிசை வீரர்களின் கால்களில் சிறிதுநேரம் ஜாலம் காட்டிவிட்டு, கண்சிமிட்டும் நேரத்தில் புறப்பட்டு சாதனை படைத்தது அது.

தேசிய அளவில் கிண்ணங்களை கைப்பற்றும் சமர்களில் அனுபவம் கண்ட இரு அணிகளுக்கிடையே நடந்த அசுர மோதலில்தான் நடந்தது அது. நடந்த இடம் ..

எத்தனையோ தேசியவீரர்களை உருவாக்கித்தந்த யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானம்.



உதைப்பந்தாட்டத்தைப்பொறுத்தவரை உலக அளவுக்கு ஈடு கொடுக்கக்கூடிய வீரர்கள் நம் வடகிழக்கு மாகாண பாடசாலைகளின் வகுப்பறைகளுக்குள் மறைந்து கிடக்கிறார்கள். தளர்ந்து கிடக்கும் 'டை' யுடன் புத்தகக்கட்டை 'டல்' லாக சுமந்துதிரியும் இவர்களை கொஞ்சம் சீண்டிவிட்டாலும் போதும், மரடோனாவாகவும், ரொனால்டினோவாகவும் விஸ்வரூபம் எடுத்து விடுவார்கள்.

இதோ, இந்தப்போட்டியும் இதை அப்படி நினைக்க வைத்தது.

2010 ம் ஆண்டிற்கான தேசியப் போட்டிகளிலொன்றில் இரண்டு கல்லூரிகளின் ஜாம்பவான்கள் இறுதிப்போட்டியில் மோதிக்கொண்டனர். உதைப்பந்தாட்ட வல்லுனர்களின் நுட்பங்களை சாதார்ணமாக்கிவிட்டு கோல் போடும் முயற்சிகளில் புதிய முத்திரைகள் பதித்தனர்.

சடுதியாக கிடைத்த இரண்டு திருப்புமுனைகளை சாதகமாக்கிக்கொண்டு வெற்றிக்கனிகளை பறித்தது, மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி. சிறப்பான ஆட்டங்களால் இறுதிப் போட்டியில் கால் பதித்த மாணிப்பாய் இந்துக்கல்லூரி கண நேரத்தில் திசை தவறியதால், 'ரன்னர் அப்' ஆக சாதனை படைத்தது.

உதைப்பந்தாட்டச் சாதனைகள் பாடசாலை மட்டங்களில் அதிகமாவதற்கு காரணம் எதுவாக இருக்கும் ..? பார்வையை ஓடவிட்டபோது, 'பனிச்' சென்று தன்னை முன்னோக்கி நகர்த்துகிறது மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி.

இவர்களின் சாதனைப் பட்டியலை வாங்கிப் பார்த்தபோது அசந்துவிட்டோம்! கேள்விப்பட்டது சரிதான். கல்லெறிந்து மாங்காய்களை பறிப்பது போல தேசிய விருதுகளை சரமாரியாக வீழ்த்திக்கொண்டு வருகிறார்கள்.

13, 15, 17, 19 வயதுக்கான தேசியப்போட்டிகளில் மட்டும் மொத்தம் ஒன்பது முதலிடங்களை கைப்பற்றியிருக்கிறார்கள். இரண்டாம், மூன்றாம் இடங்களும் அதிகளவில் இவர்களுக்கு சொந்தமாயிருக்கிறது.

சாதிப்பதில் உச்ச கட்டமாக.. 2004 ஆம் ஆண்டில் தென்கொரியாவில் நடந்த சர்வதேசப்போட்டியில் நான்காம் இடத்தைப் பெற்று ஈட்டிய விருதுகள் அதிபர் அறையில் ஜொலிக்கின்றன.

தேசிய, மாகாண மட்டத்தில் கவனத்தை ஈர்க்கும் உதைப்பந்தாட்ட அணியாக தன்னை அடையாளப்படுத்திவிட்ட இதன் பயிற்றுவிப்பாளர்களை சந்தித்தோம் ..

"பாடச்சுமைகளும், புத்தகப்பையுமாக இதோ அப்பாவிகளாய் திரிகிறார்கள். எப்படி இவர்களால் மைதானங்களில் சீற்றம் காட்டமுடிகிறது? "



கொஞ்சம் இறுக்கமாகவே பதிலளிக்கிறார் பயிற்சியாளர் ஞானராஜ். இவர் ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் 'B' தகைமை பெற்ற சிறப்புக்காரர் ..

" ஒரு போட்டிக்கான ஆட்ட வியூகத்தை ஒரு வருடத்திற்கு முன்பே திட்டமிட்டு விடுவோம். நுட்பமும், திறனும் ஒளிந்திருக்கும் மாணவனை இனங்காணுதல் முக்கியம். வேண்டிய அளவுக்கு பயிற்சி ஆட்டங்களில் ஈடுபடுத்துகிறோம், இதனால் வெற்றிக்கான ஆர்வம் அதிகரிக்குது .."

வெற்றி ரகசியத்தை ஓரளவு விளக்குகிறார் கோச் ஞானராஜ்.

" போட்டிகளின்போது எடுக்கப்படும் வீடியோக்கள் மாணவர்களுக்கு காட்டப்பட்டு தவறுகளைத் திருத்துகிறோம் பெற்றோர்களையும் கலந்துபேசி ஆட்டத்தை நிர்ணயிக்கிறோம்."

மற்றொரு பயிற்சியாளரும் முக்கியமானவர் .. இவர் ஜேக்கப்.

" பயிற்சியின்போது கடுமை அவ்வளவாய் இல்லை, இரண்டு மணிநேரத்திற்கும் அதிகமான பயிற்சியின்போது சத்துணவு கொடுக்கிறோம். காலை ஆறு மணிக்கு ஆரம்பிக்கும் இரண்டு மணித்தியாலப்பயிற்சி மிக முக்கியமாகும்."

விளையாட்டுத்துறையில் இந்த அளவுக்கு சாதிக்கிறார்களே என்று பாராட்ட ஆயத்தமானபோது .." இதற்கு காரணம் நாங்களல்ல.." என்று அதிபர் அறையை நோக்கி கையை காட்டுகிறார்கள்.

அங்கே புன்னகையோடு அருட் சகோதரர் ஸ்ரனிஸ்லஸ்! கல்லூரி அதிபர். நேரடி நெறிப்படுத்தாளர்.

' God Bless You, Brother !'



## சாதனைப்பாடசாலைகள்!



விளையாட்டிலேயே குறியாய் சாதித்துக்கொண்டிருக்கும் வீரர்களை மைதானத்தில் நாம் சந்தித்துக் கொண்டிருந்தபோது, கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு வகுப்பறைக்குள் தேசிய விருதொன்று ஓசையில்லா வந்து உட்காந்திருந்தது.

விருதுக்கு உரியவர் செல்வன் ஜூட் மிதுஷன் பிகுறாடோ !
ஆம், 2010 க்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 190 புள்ளிகள் பெற்று, நாட்டின் மூன்றாவது இடத்தை கல்லூரிக்கு தந்திருக்கிறார். இது மன்னாருக்கே பெருமையைச் சேர்த்திருக்கிறது.

Wel done school !

மேலும் விருதுகளை அள்ளிக் கொள்ள வாழ்த்துகிறோம்.



## 'ஓம் நமசிவாய..'

மகா சிவராத்திரி ..
சர்வலோக மகோன்னத
ராத்திரி..


சைவஒழுக்கத்தில் முதன்மையானது திருநீறு அணிதல், அணியும் தருணம் சிவபிரானை நினைத்தலும், திருவைந்தெழுத்தை உச்சரித்தலும் அவசியம். தேவாரம் அல்லது திருவாசகம் ஒன்றை வீட்டில் வைத்துக்கொள்ளல் சிறப்பாகும். நாம் ஒருவரைக் காணும் பொழுது அவர் சிவபெருமானது திருவடிகளை சேர்வதற்கு யாத்திரை செய்கிறார் என்றெண்ணி கனம் பண்ண வேண்டும்.

இம்மாதத்தில்........(தை)

* தைமாதம் பூரணையுடன் சேர்ந்து வரும் நட்சத்திரத்தினம் முருக வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும். இத்தினத்தில் பால்குடம், காவடி எடுத்து முருகனை வழிபடுவது சிறந்தது.

* தை அமாவாசை நாள் அபிராமிப்பட்டரின் பிரார்த்தனையின் நிமித்தம் அம்பிகையின் அருளால் பூரணை தினமாகக் காட்சியளித்தது. இந்நாளில் அபிராமி அந்தாதி படித்து தேவியை வழிபடுதல் சிறந்தது.

நன்றி = இந்து மக்களுக்கு ஓர் கையேடு



# குறை..!?



மரண விளிம்பில் நான் ..

காதல் தோல்வி


எனக்கென்ன குறை –
ஏன் வெறுத்தாய் ..?

பரீட்சையில் தோற்றேன்
பாடப்புத்தகங்களின் பக்கமெல்லாம்
நீ இருந்ததால்

அப்படியும் புரியவில்லை நீ

எழுதிய கடிதங்களை
திருப்பிய பொழுதெல்லாம்
என் பேனா எப்படி வருந்தி இருக்கும் ..





உனக்கு என்னைப் பிடிக்காமலேயே இருந்தது
அப்பொழுதும் சளைத்தேனா ..?

முறைப்படி பெண்கேட்டு
தாம்பூலம் மாற்றியும்
சற்றேனும் நாணிப்புன்னகைத்தாயா ..?
ஊஹூம் ..

மாலைசூடி மனைவியானாய்
மணவாழ்வில் விளக்கானாய்
சுகதுக்கம் பகிர்ந்தாய்
பணிவிடைக்கே பொருளானாய் ..
காதலைத்தான் காணவில்லை

அடுத்தடுத்து விளைந்தன
வாரிசு முத்துக்கள், மழலைச்சொத்துக்கள்

தாயாய் தவம்புரிந்தாய்
தந்தையென பெருமைதந்தாய்

காலம் சாமரம் வீசிக்கொண்டேயிருந்தது

மருமக்களை வரவேற்றாய் – பேரக்
கொடிகளுக்கு கிளையானாய்

எத்தனை உழைப்பு, எத்தனை பொறுப்பு

' கற்பரசி இப்படி வாய்த்திட
புண்ணியக்காரனடா ' வென
புகழ்ந்தனர்

ஆயினும், என் குறை குறைதானே ..!



முறையான வாழ்வு,
புகழ் எனைச்சேர ..

நரைகூடித்தளர்ந்திட்டும்
நாடித்தான் உழைத்தாய் -- முடிவில்
தாலியை ஒற்றிக் கண்மூடிமறைந்தாய்

இதோ ..

சுற்றம் சூழ்ந்து காத்திருக்க --
"மகராசனாய் வாழ்ந்தார் .."
ஒலிகள் காதில்விழ

என்கதையும் -- இனி
இரண்டொரு நிமிடம்தான்
ஆயினும் -- மனதை உறுத்தியது --

என்னைக் காதலித்தாளா ..?



## மழையோ மழை ..!



" நல்லா நனைஞ்சிட்டன்..
டவலைக் கொடு .."

" நானும் நல்லாத்தான்
நனைஞ்சிருக்கேன் ..
முதல்ல கூரையை
ரிப்பேர் பண்ணுங்க .."



"எல்லாம் ஒரு
முன்னெச்சரிக்கைதான்..!
வெள்ளம் ஏறிடுச்சின்னா
'போட்'டை இறக்கி
அதில ஏறி வீட்டுக்கு
போயிடலாம் .."



" ஹையா , 'மெட்ச்'சில
நமக்குத்தான் வெற்றி ! "

" எப்பிடி சொல்ற ..? "

" இந்தா மழை வந்திட்டே..!!"

# கன்னியா வெந்நீரூற்று !

'கன்னியா வெந்நீரூற்று' !

நினைக்கும்போதே கதகதப்பாக இருக்கிறது இல்லையா?

குளித்தால் எப்படியிருக்கும்! அதுவும் இந்த மழை நேரத்தில் .. ஒருதடவை சென்றுவந்தால் என்ன ..

போருக்குப்பின் இந்த வெந்நீர்க்கிணறுகள் 'பிஸி' யாகி விட்டன. அவ்வளவு உல்லாசப்பயணிகள் படையெடுக்கின்றனர். அதிகாலை ஐந்துமணிக்கெல்லாம் வாயில்களைத்திறந்து விடுகிறார்கள். அந்த நேரத்தைத்தான் வருபவர்களும் தேர்ந்தெடுக்கிறார்கள். ஏனென்றால், நேரமாக ஆக சனம் அதிகரிக்கும்.

இதில் கிடைக்கும் சுடுதண்ணீர் உடல் சுகத்திற்கு மட்டுமில்லாமல், சருமத்திற்கும் ஆரோக்கியமானது என்பது மக்களின் நம்பிக்கை. அதோடு, இந்த குளியலில் கிடைக்கின்ற பக்தி உணர்வும் முக்கியமான ஒரு ஆனந்த அனுபவம்.

இந்தவகை காரணங்களால், இந்த இடம் மிகுந்த மரியாதையுடன் நோக்கப்படுகின்றது.

திருகோணமலை நகரிலிருந்து வடமேற்காக, ஹொரவ பொத்தான -- அநுராதபுரம் சாலையில் பயணித்தால் கன்னியா வந்து சேர்கிறது. 6 - 7 கிலோ மீற்றர் தூரத்தில் சென்று








வளைந்தால், 1 கிலோ மீற்றர்தான். ரோட்டோரத்தில் ஆடிக்கொண்டிருக்கும் மயில்கள் சட்டென்று காட்டுக்குள் ஓடி மறையும். அதுதான் கிண்ணியா.

இந்த தெய்வீகக்கிணறுகளின் அடிமுடிகள் இன்னும் தெரியாது. ஆனாலும், வழக்கம்போலவே புராணச்சான்றுகள் இந்த அற்புதத்திற்கு அழகூட்டுகின்றன. இராவணனின் வாள்முனையால் தாக்கப்பட்ட பூமிப்பகுதிகளில் இருந்து புறப்பட்ட வெப்பத்தின் விளைவே இது என்றும், பௌத்த பிக்கு ஒருவரின் வாழ்விடப் பின்னணியும் உண்டு என்றும் நம்பிக்கைகள் உள்ளன. மொத்தம் ஏழு கிணறுகள் உள்ளன. சோப் பாவிக்க தடை உள்ளது -. அதற்கென்று தனியாக தண்ணீர்பகுதி உள்ளது. ஏழு கிணறுகளும் வெவ் வேறு அளவுகளில் சுடும் தன்மை கொண்டதால் குளியல் சுகம் மேலும் சுகானுபவம் தருகிறது.

ஒரு தடவை சென்று புனலாடிவா நெஞ்சமே.. பயணமும் இப்பொழுது பிரச்சினை இல்லை. (குளியல் கட்டணமும் பத்து ரூபாய்தான்!)





நகைச்சுவையான உண்மைக்கதை!

# 'கப்பல் வாழைக்குலை




'இடுக்கண் வருங்கால் நகுக' என்று திருவள்ளுவர் அருளியது துன்பம் வரும்போது சிரிப்பதற்காகத்தான். ஆனால் துன்பங்களே எத்தனை நகைச்சுவை மயமானதென்று ஆற அமர்ந்து சிந்திக்கும்போதுதான் தெரியவரும். வாய்விட்டுச்சொல்லிச்சிரிக்கும் அளவுக்கு அதில் நகைச்சுவையிருக்கும்.

அதிலும் நாம் படாத துன்பமா ..?
கொஞ்சம் வாசித்துப்பாருங்கள் இந்த
உண்மை நிகழ்ச்சியை ..



இதோ, சைக்கிள்ள வலு நிதானமா போகிறவர்தான் கதிர்காமத்தம்பி.

ஊரில இவரைத்தெரியாத சனம் இல்லையென்டு சொல்லலாம். இவருக்கும் தெரியாதவையில்லை. அப்படியொரு பிடிப்போட உரிமையாய் பழகுற மனுசன். நேர்மையாய் நடக்கிறதால பிரசித்தம் இன்னும் அதிகம்.

ஆனா 'அவரிட நேர்மையால பெரிசா வீட்டில என்ன நிறைஞ்சு வழியுது' ங்கிறது இவருட தர்மபத்தினியோட நெடுநாளைய எரிச்சல்.

'கூர் இல்லாத மனுசன்' 'எதுக்குத்தான் லாயக்கு' ங்கிறது நெடுநாளைய புலம்பல் ஆனாலும் 'ஏதோ பிள்ளைகளயாச்சும் நல்லா படிக்க வக்கிறாரே' என்கிறதில ஒரு நிம்மதிப்பெருமூச்சு அடிக்கடி வரும்.

வீட்டில தன்னைப்பற்றிய 'கணிப்பீடுகளை' கண்டும் காணாமல் அன்றாடக்கருமங்களை திருப்தியோட செய்துவருகிறார் கதிர்காமத்தம்பி.

இவரும் ஒரு சிரிப்பு வலைக்குள்ள அகப்பட்டு கஸ்டப்பட்டவர்தான். அது பிறகுதான் அவருக்கும் தெரிஞ்சது. ஆனா அதெல்லாம் இப்ப எதுக்கு என்ட மாதிரித்தான் இங்க சைக்கிள்ள போய்க்கொண்டிருக்கிறார்.

சரி, அந்தக்கதைய பாப்பம்..

அப்ப கடுமையாய் சண்டை நடக்கிற நேரம். ஆளை ஆள் பாக்கிற நிலையில யாருமே இல்லை. குடும்பத்தை ஒரு கையிலும், அகப்பட்டதை மறு கையிலுமாக புடிச்சுக்கிட்டு, ஓடுறவங்களுக்குப் பின்னால ஓடிக்கிட்டு இருந்த நேரம். அதிலும், கதிர்காமத்தம்பியோட ஊர் கடல் சூழ்ந்து. அந்த தீவுப்பகுதிக்குள்ள சின்ன கிராமங்கள் தள்ளித்தள்ளி இருக்கும். டவுனுக்குள்ள பெடியலும், ஆமியும் அடிபடும்போது சனங்கள் தள்ளியிருக்கிற கிராமங்கள்ள போய் தங்கியிருப்பினம். அடிபாடுகள், சத்தங்கள் ஓய்ஞ்சிருக்கிற நாட்கள்ள திரும்பிவந்து வீடு வாசல்களப்பாப்பினம். எத்தன நாளென்டு சொல்ல முடியாது.

தார் றோட்டுப்பக்கம் ஈ காக்கை கூடத் திரியாது. வெறிச்சோடிக் கிடக்கும். அவ்வளவு பயம். இதனால குறுக்குப்பாதைகளால சனம் திரியும். நல்ல மணல்வெளிப்பிரதேசம் அது.

இப்பவும் அப்பிடித்தான் சனம் போய் தங்கியிருக்குதுகள். கதிர்காமத்தம்பியும் டவுனில் இருந்து நாலு மைல் தொலைவில இருக்கிற ஒரு ஊர்ல குடும்பத்தை கொண்டுபோய் வச்சிட்டார். தனியாலென்டா 'சிவனே என்டு சொந்த வீட்டிலேயே திண்ணையில கிடந்து விடுவார். வெடிகள், சத்தங்கள் எல்லாம் அவருக்கு வெறுத்துப்போச்சு.

ஆனா வீட்டில சம்மதிக்கனுமே .. ஒரு சத்தம் கேட்டாலே பெட்டிகள், பேக்குகளோட படலையில போய் நிக்கிற ஆட்கள் அவை.

இந்தமுறை அடிபாடு கொஞ் சம் கூடத்தான். டவுன்பக்கம் வீடெல் லாம் காலி. உத்தியோகம் பாக்கிற வை காலையில வந்து அவைய வையல் ஒபிசில சைன் பண்ணிட்டு, கடைகள்ல கிடைக்கிற சாமான்கள வேண்டிக்கொண்டு, திரும்புற வழியி ல வீட்டையும், கேற்'றில தொங்குற பூட்டையும் 'செக்' பண்ணுவினம்.

வீடு வாசல்கள விட்டுப்போட் டு பாதுகாப்புன்னு தூரத்தில வந்து இருக்கிற வீடுகள்தான் இப்ப தஞ்சம் டவுன்ல இப்போதைக்கு போய் குடியிருக்க ஏலாது போலத்தான் கிடக்கு. அங்க காலம்பர பத்துப்பதி னொரு மணி வரைக்கும்தான் ஊசா ட்டம்.

கதிர்காமத்தம்பியும் தன்ர குடும்பத்த தெரிஞ்ச ஒரு வீட்டில தான் கூட்டிவந்து வச்சிருக்கார். எல் லா சனத்துக்கும் கிராமத்து வீடுகள் ல இடம் கிடைக்காது. ஒரு டவுன் சனத்த சின்ன ஊர் எப்படித்தாங்கும். குழந்தைகுட்டிகளோட வீடுகள விசா ரிச்சுக்கிட்டு சனங்க திரியிறதப்பாக்க பரிதாபமாய் இருக்கும்.

ஆனா நம்ம க–தம்பியப்பத்தி ஏற்கனவே சொல்லியிருக்குதானே. வலு செல்வாக்கானவர். பாக்க எளி மையாய் இருந்தாலும், பேசிப்பழகுற தில பெரிய ஆக்கலெல்லாம் அவர நேசிப்பினம். இப்பகூட ஒரு கடைக் கார நானா தன்ர தென்னந்தோட்ட ஓலை வீட்டை 'எவ்வளவு நாள்னாலு ம் இரு மச்சான்' எண்டு கொடுத்துப் போட்டார்.

வீட்டவைக்கு அப்பாவின்ர செல்வாக்கு தெரியும்தான். இருந்தா லும் 'எதிலதான் சுளியாய் இருக் 'கார்' எண்ட முணுமுணுப்பு எண்டை க்கும் போலத்தான் இருக்கு.

சொல்ல மறந்திட்டன் ..

காலையில டவுனுக்கு வந் து அலுவல் பாத்துப்போட்டு ஓடுற வையள்ல க– தம்பியும் ஒருத்தர். ஏனெண்டால் அவரும் ஒரு உத்தி யோகம் பாக்கிறவர்தான், லேகப்பட் டவர் இல்ல மனுசன்!

இண்டைக்கும் தேத்தண்ணி யக் குடிச்சுப்போட்டு டவுன் வந்தார். போற வாற அத்தனைபெருக்கும் 'குட் மோர்னிங்' சொல்றார். கதை கேக்கிறவைக்கு நின்று நிதானமா பதில் சொல்றார். அப்புறம் எல்லாம் வழக்கம்போலத்தான் ..

ஒபிசில சைன் பண்ணுவார் கையில் இருக்கிற காசை எண்ணி ப் பாத்திட்டு கட்டுப்படியாகிறத வா ங்கி பேக்கில போடுவார், இன்னொரு இடத்தில போய் அடை ஞ்சிக்கிட்டு கிடக்கிற பிள்ளைகள யோசிப்பார், அதுக்கொரு கணக்குப் போட்டுவிட்டு ஒற்றைப்பலகையில் திறந்து பரபரக்கிற கடைக்குள் நுழைவார். கொஞ்சம் பிஸ்கட், மிக் ஸர் வாங்குவார். அப்படியே கடல் பக்கம் மிதித்தால் அங்கும் நண்பர் கள்தான். 'கொண்டு போ மச்சான், காசு பிறகு பாப்பம்.' எண்டு மீன், நண்டுகள் ண்டு கிடைக்கும்.



அதுக்காக எல்லாம் எடுக்க மாட்டார்.காசுக்கேற்றமாதிரி அளவாய் வேண்டுவார். 'நல்லா நடந்தா எப்பவு மே மதிப்பாங்க' ங்கிறதில க– தம்பி கவனமாயிருப்பார்.

எல்லோரும் பரபரப்பாய் டவுனு க்குள் ஓடித்திரிந்து அலுவல் பாக் கைக்க இவர் மட்டும் நிதானமாய் நடமாடுவார். அப்படியே வீட்டையும் பாத்திட்டு பதினொரு மணிக்கெல் லாம் திரும்பிடுவார். எல்லோரும் பாவிக்கிற பாதைகள விட்டுட்டு தன க்குன்னு ஒரு ஸ்பெசல் குறுக்குவழி வச்சிருக்கார். தனியா அதால போற தில ஒரு சந்தோசம்.

இண்டைக்கும் டவுன் அலுவ ல் முடிய இதோ தன்னோட 'தனி வழி' யில பெடல மிதிக்கிறார். அட ர்த்தியாக வீடுகள் நிறைஞ்ச ஊர்ம னைக்கூடாக சைக்கிள் சென்றது.




" ஐயா, டோனியோட இட த்துக்கு ஆள் வேணும்னு கேள்விப்பட்டோம்.."



'எப்ப சண்டை முடியும், வீடு களுக்கு எப்ப திரும்புவோம்' என்ட பெருமூச்சும் வருகிறது. வெறுமை யாய் கிடக்கிற வீடுகளைக் கடக்கி றபோது அதில் இருந்த ஆட்களோட நினைப்பு வருகிறது. எல்லாரும் அவ ரின்ர 'ப்ரண்ட்' மார்தான்.

மேலும் வீடுகளைக் கடந்து செல்கிறார். ' எவ்வளவு செல்வாக் கா வாழ்ந்தவை, எல்லாம் கண்பட்ட மாதிரிப் போச்சு..'

இந்த இடத்தில தம்பியின் சிந்தனை தடைப்பட்டது. காலை ஊன்றியபடி பக்கத்து வேலியை நிமிர்ந்து பார்த்தார்.. பெருத்த கப்பல் வாழைக்குலையொன்று வேலியை முட்டித்தள்ளியபடி றோட்டைப்பார்த்து க்கொண்டிருந்தது.

ரெண்டே நாள்ல பழுத்திடும். சனப்புழக்கம் இருந்திருந்தால் எப்ப

லோ வெட்டிப் பழுக்க வச்சித்திண்டிரு
ப்பினம். இப்பகூட கவனிக்க ஆளில்
லாமல் கிடக்கு. இது உவன் பிரகாச
த்திண்ர வீடு. பாலம் உடைஞ்சு பாதை
மூடியபோதே குடும்பத்தோட நீர்கொழு
ம்பு போனவன்தான்.

தம்பி பெருமூச்சு விட்டார்.
அவனும் அவரிட நண்பன்தான்.

சைக்கிளில் இருந்தபடியே கப்
பல் குலையை நட்போடு பார்த்தார்.
பெடலை மிதித்தார். ஒரு சனமும்
வராத பாதை இது. தம்பிக்கு மட்டுமே
தெரிஞ்ச பாதை. நேரமானால் வெடிகள்
கேட்கத் துவங்கிடும்.



கப்பல் குலையடியில நின்ட
தால வந்துசேர நேரமாச்சு. மனுஷி,
பிள்ளைகள் குடைந்தெடுத்துவிட்டார்
கள். எரிச்சலை அடக்கிக்கொண்டு
சைக்கிளை நிறுத்தியவர் பேசாமலே
இருந்திருக்கலாம். கப்பல் வாழைக்கு
லை வாயில் வந்து தொலைத்தது.
அதோடு கஸ்ட காலமும் ஆரம்பமா
னது.

"கொஞ்சமாவது அறிவிருந்தா அத
அப்படியே விட்டுட்டு வருவாரா மனுசன்
இன்.டைக்கு கப்பல் பழத்தோட விலை
என்ன ..காசிருந்தாலும் கிடைக்குமே ..
அனாதையா விட்டுப்போட்டு வர்றதுன்
டா கொஞ்சமாவது வீட்டில அக்கறை
இருக்கா ..?"

அதிர்ந்துவிட்டார் தம்பி. அட, இப்
படி ஒண்டு இருக்கா ..

"அப்பாவுக்கு இதெல்லாம் அக்க
றையில்லை .. எங்களுக்கு மட்டும்
புத்தி சொல்லுறதென்டால் வெளுத்து
வாங்குவார்."

சமயம் பாத்து அடித்தான் ரெண்
டாவது பயல். எத்தனை நாள் சந்தர்
ப்பம் பாத்திருந்தானோ ..

சுற்றிலுமாய் கூடிவிட்டதுகள் வாரிசுகள்
"வெட்டிட்டு வந்திருக்கலாம்தானே
அப்பா ..அவர் உங்கட ப்ரண்ட் தானே
எத்தனை நாள் வச்சுச் சாப்பிடலாம்"

தம்பியின் நிலைமை ஒரு மா
திரி ஆகி விட்டது. 'எப்படியெல்லாம்
விளக்கமாய் கதைக்கினம். நமக்கு
இதெல்லாம் விளங்காம போச்சே ..'

"சரி சரி ..சாப்பிட வாங்கோ ..
எல்லாம் தலையெழுத்து ." அழாத
குறைதான்.

அதிர்ச்சி நிலையிலேயே கையை
கழுவினார் தம்பி. ' மெய்தான், ஆளி
ல்லாத இடத்தில கிடக்கிறத கொண்டு
வந்திருக்கலாம்தான். இப்ப நம்மல
இளக்கமா நினைக்க வச்சிட்டமே'

சாப்பிட்டுக்கொண்டே சமாளித்தார்
தம்பி. "உங்க பார் கனகம், நானும்
அத வெட்டத்தான் சைக்கிளால இறங்
கினனான். என்ன இருந்தாலும் வீட்டு
காரர் இல்லாத போது...."



மறுபடியும் தொடங்கியது ..

"நிப்பாட்டுங்கோ கதைய, இண்டை
க்கு நேத்தா இங்க குடும்பம் நடத்தி
றன் .. ஒவ்வொருத்தரும் எப்படியெல்
லாமோ வீட்டைப்பாக்கினம் ..கதைக்கி
றியல் "

அப்பிடியில்லை கனகம் ..யாரும்
பாத்தினமென்டால் .."

"அதான் ஆளில்லாத இடமெண்டி
யல் ..யார் குற்றம் சொல்லப்போகினம்
நான் என்ன களவு செய்யச்சொல்லுற
னே.. இந்த கஸ்டமான நேரத்தில
அது இருந்தா பிள்ளைகளுக்கு புட்டு,
பலகாரத்தோட சாப்பிடக் கொடுக்க
லாமெண்டுதான் சொல்லுறன். நாளை
க்கு அந்த பிரகாசம் அண்ணர் வந்தா
இதுக்குரிய காசை தேடிக்கொண்டு
போய் குடுக்காமல் இருப்பனே.."

சும்மா சொல்லக்கூடாது ஒவ்வொ
ரு பொயின்றடும் தலையில அடிச்ச
மாதிரித்தான் சொல்றா.. இதுக்குமேல
நான் எங்க வாயைத்திறக்க ..இதுக்கு
மேலேயும் கதைச்சால் நிலைமை மோ
சமாகும். பிள்ளைகள் வேற எல்லோ
ரும் இண்டைக்கின்டு வீட்டில இருந்து
விடுப்பு பாக்கினம். குளுகுளு ன்னு
இருக்கும் அவங்களுக்கு.

பெருத்த அவமானமாக உணர்ந்து
வீராப்பையும் விடாமல் அன்றிரவைக்
கழித்தார் தம்பி.

மறுநாள் வழக்கம்போல் டவுனு
க்கு போக ஆயத்தமாகிறார் தம்பி.
ராத்திரி முழுக்க ஷெல், வெடிச்சத்த
ங்கள் டவுன் பக்கம் கேட்டபடிதான்.
போறதா நிக்கிறதா என்டு ரோட்டோ
ரங்களில் ஆட்கள் வாக்கு வாதத்தில்
ஈடுபட்டிருக்கினம். சைக்கிள்களும்,
மோட்டர் சைக்கிள்களும் பாதையோர
ங்களில் நிற்கின்றன.

"ராத்திரி சேதங்களோ தெரியல .."

"ஹெலிகொப்டர்கள் வந்து திரும்பி
டுச்சு, இனிப்பிரச்சினையில்லை .."

"ஒபீஸ் பக்கம் இண்டைக்கு போக
வேண்டாம் .. சாமான்கள வேண்டிட்டு
திரும்பிடுவம் .. இண்டைக்கு எப்படியும்
இறைச்சி அடிப்பார் ரசூல் நானா, நேற்
றுச்சொன்னவர். "

டவுன் பக்கம் சனம் கிளம்புது.
தனக்கே உரித்தான ஸ்டைலில்
அவதானித்துக்கொண்டிருந்த தம்பியும்
சைக்கிளை ரோட்டுக்கு ஏற்றினார்.

"என்ன வேண்டுறது ..? " கனகத்
திடம் கேட்கிறார்.


"எல்லாம் இருக்கு ..பாலையின்
நல்ல மலிவாக்கிடைக்குதாம். பெரிசா
பாத்து வாங்கிவாங்க ..உழுந்தும், கட
லைப்பருப்பும் வேண்டுங்க. பிள்ளைக
ளுக்கு பின்னேரம் வடை சுட்டுக்கொடு
ப்பம். இதுகளுக்கு சரியா போரடிக்குது
இங்க. பாவம் .. இன்னும் எத்தனை
நாளோ .."



"தெய்வம் என்பது
வரம் கொடுக்கும்
இயந்திரமல்ல

அது ஒரு உறவு
ஐந்து வேளையும் உபசரி "

*வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை முடிந்து பள்ளியில் இருந்து வெளியேறிய அன்வர் உதிர்த்த ஆன்மிக முத்துக்கள்.*



தம்பிக்கு நல்ல தெம்பாய் இருந்தது தான் உதவாக்கரை இல்லை என்டது போல கனகம் மதிப்பளித்துக் கதைப்பதாய் உணர்ந்தார்.

பதில் பேசாமல் பெடலை மிதித்தார்

முதலில் புறப்பட்டவர்கள் வருவதற்குள்ளேயே டவுன் வந்து சேர்ந்தார் தம்பி. அவருக்குத்தான் குறுக்கு வழி இருக்கிறதே!

ராத்திரி மோதல் கொஞ்சம் கூடத்தான் போல. புதிய இடங்களிலெல்லாம் சேதங்கள் தெரிந்தன. சில இடங்களில் புகை கிளம்பிக்கொண்டிருந்தது. சனத்துக்கு விவரமா பாக்க அவகாசமில்லை. வந்தமா, எதையோ வாங்கினமா, புறப்பட்டமா என்று மூலைக்கு மூலை பறந்தார்கள்.

தம்பியும் இன்று ஆட்களுடன் அதிகம் கதைக்கவில்லை. தவிர்க்க முடியாத நண்பர்களுக்கு ஒரு தலையாட்டலோடு சரி.

பெரிய பாலை மீன்களை அநியாய மலிவு விலையில விக்கிற மீனவத் தோழர்களை நினைத்து வருந்தினார் தம்பி. அவர்களுக்கு மிகுந்த பணத்தட்டுப்பாடு. அதோடு விற்று முடித்து அவர்களும் நேரத்திற்கு பாதுகாப்பிடம் திரும்பவேண்டும், பாவம்..!

இன்று சற்று விரைவாகவே கடை அலுவல்களை முடித்துக்கொண்டு கிளம்பினார் தம்பி.

இதோ தனது பிரத்தியேக குறுக்குப் பாதையில் இறங்கிவிட்டார். தனி ஆளாக சைக்கிளை விரட்டுகிறார். மணல்பாதையில் வெறுமையான வீடுகளை பாசத்தோடு பார்த்தபடி கடக்கிறார். சட்டென ஏதோ நினைவுக்கு வரவே தானாகவே பிரேக் பிடிக்கிறது. அவசரமாக அண்ணாந்து பார்த்தார்.

'ஆஹா, கப்பல்குலை இன்டைக்கு செந்நிறம் கண்டிருந்தது. என்ன அழகு! நூற்றி ஐம்பது பழமாவது இருக்கும். இரண்டு பழம் போதும் ஒரு ஆள் பசியாற ..'

எதற்கும் சுற்றும் முற்றும் பார்த்தார் ஒரு தகரமும் வேலியடியில் கிடந்தது



'வெட்டுவோமா ..' நெருங்கினார்.

மணி இரண்டு இருக்கும். வேலிப்படலையைத்திறந்துகொண்டு சைக்கிளை உள்ளே செலுத்தினார் தம்பி. கனகம் ஓடிவந்து இன்னும் அகலமாக திறக்க உதவினாள். முற்றத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு இரண்டு சாமான் பேக்குகளை அவளிடம் கொடுத்தார் தம்பி

கனகத்தின் முகம் விழுந்துவிட்டது. எதையோ எதிர்பார்த்திருக்கிறாள். தம்பி அதைப்பார்க்காதது போல் டயரில் காற்று இருக்கிறதா என்று அமத்திப்பாத்துக்கொண்டிருந்தார். ஏனோ தேவையில்லாமல் அதைச் செய்தார்.

இன்று கனகம் கூப்பிடாமலேயே சாப்பிட அமர்ந்தார். ஒரு வார்த்தையும் கதைக்காமல் பரிமாறினாள் கனகம். ருசி தெரியவில்லை. மூளையில் அப் செட் ..' இன்டைக்கும் அத வெட்டாம விட்டுட்டமே ..சே ..வடிவா வெட்டியிருக்கலாம்..' சாப்பிட்டு முடித்தார்

வாடிப்போன இரண்டு கதலி வாழைப்பழங்களை ஒரு தட்டில் வைத்து 'ணங்' என்று வைத்துவிட்டுப் போனாள் கனகம். உண்டபின் பழம் உண்ணுவது அவருக்குப்பிடிக்கும் என்று அவளுக்குத்தெரியும். ஆனால் இன்டைக்கு அவள் தந்தது குத்திக்காட்டுமாப்போல இருந்தது.

மறுநாள் சாதாரணமாகவே டவுனுக்குப்போய் வந்தது சனம். தம்பியும் வழக்கம்போல ஒபிசில சைன் பண்ணிப்போட்டு தன்ர வீட்டையும் போய் ஒருக்கா 'செக்' பண்ணினார். செடிகளுக்கு தண்ணீரும் ஊற்றினார். கடற்கரைப்பக்கமா சென்று கறிக்குத்தேடிய போது சிமியோன் ராலும், ஓரா மீனும் தந்தான். வாங்கிப்போட்டுக்கொண்டு சோலிகளையும் அளவா பாத்துக்கொண்டு தனது குறுக்குவழியில் வந்து இறங்கினார்.

இன்று கப்பல் குலை இருக்கும் இடத்திற்கு விரைவாகவே வந்து சேர்ந்தார். பழுக்க ஆரம்பித்துவிட்டது குலை. சைக்கிளை 'ஸ்டேண்ட்' போட்டுவிட்டு யோசித்தார் ..

பதினைந்து நிமிடத்தில் வீட்டை அடைந்தார். படலையை முட்டித்தள்ளியபடி அப்பா சிரமப்படுகிறாரே என்று பிள்ளைகள் இருவர் ஓடிவந்து உதவி செய்தனர். பின்னர் சென்று அமர்ந்தபடி ஒருவரையொருவர் பாத்துக்கொண்டனர்.

அவர்கள் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்களென்று தெரியவில்லையே என்று தம்பிக்கு ஆதங்கமாக இருந்தது. இன்று துப்பரவாகவே மனைவி பிள்ளைகள் கதைக்காமல் இருப்பதற்கும், கப்பல்குலைக்கும் சம்பந்தம் இருப்பதை அவரால் ஒதுக்கமுடியவில்லை.

மறுநாள் ஒரு முடிவோடு எழுந்தார் தம்பி. புறப்படும்போது தேத்தண்ணி கொண்டுவந்த கனகத்திடம் " கத்தியையும், ஒரு சாக்கையும் எடுத்துத்தா" என்றார். புரிந்துகொண்ட கனகத்திற்கு தன் வாழ்க்கையே மலர்ந்ததைப்போல இருந்தது. போருக்குப்போகும் கணவனுக்கு திலகமிட்டு அனுப்புவதைப்போல அவர் கேட்ட பொருள்களை வலு பதவிசாய் பையில் போட்டுக்கொடுத்தாள்.

' வாலைக்குலையோட இன்டைக்கு திரும்புவார்' கனகத்திற்குத் தெரியும். தம்பி ஒரு முடிவை எடுத்தா பிறகு மாத்த மாட்டார்.

இன்று டவுனுக்கு வந்த தம்பி பெரிதாய் அலுவல்களில் மினக்கடவில்லை. அதிமுக்கிய காரியங்களில் ஈடுபடும் நாட்களில் அவரிடம் ஒரு குறுகுறுப்பு இருக்கும். இன்றும் அப்படி உணர்கிறார்.

பதினொரு மணிக்கெல்லாம் குறுக்கு வழியில் இறங்கினார். தூரத்தைக் கடந்தவேகம் அவருக்கே தெரியாது. பின் கரியரில் கட்டியிருந்த சாக்குப்பை இருக்கிறதா என்று அடிக்கடி தொட்டுப் பார்த்துக்கொண்டே வந்தார்.



பிரகாசத்தின்ர வீட்டடியில் வந்து 'பிரேக்' அடிச்சபோது இருபது வயது இளைஞனைப்போல ஒரு துடிப்பு தெரிஞ்சது.

'ஸ்டேன்ட்' போட்டு நிறுத்திவிட்டு சாக்கையும், கத்தியையும் கையில் எடுத்துக்கொண்டார். வழக்கம்போல றோட்டில ஈ காக்கை இல்லையெண்டாலும் சுற்றிலும் ஒருக்கா பாத்துவிட்டு கப்பல்குலை தொங்கும் வேலியை நெருங்கினார்.

மணிக்கூட்டை கழற்றி சேர்ட் பொக்கட்டுக்குள் போட்டுவிட்டு, அண்ணாந்து குலையை வெட்ட ஆயத்தமான போது முகத்தில் 'சில்' லெண்டு குளிர்ந்த துளியொன்று விழுந்தது. அப்பத்தான் யாரோ வெட்டியிருந்த குலையின்ர அடித்தண்டிலையிருந்து தண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது.

(கதிர்காமத்தம்பியின் நிலை வீட்டில் இன்று எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பது உங்கள் பொறுப்பு)



















அந்த அழகிய தபோவனமும் ஆசிரமும்
களையிழந்து கிடந்தது

நேற்றுவரை இப்படி இருந்ததில்லை

அற்புதத்தின் மறுபெயர் அமைதியோவென
அதிசயிப்பர் அக்–
கானக்குடில் சூழ் ஏகாந்தம் கண்டு

பரிமளம் வீசும் அகில் விருட்ஷம்
சந்தனமர நட்புக்கு நன்றிகூற
குளிர்ச்சியை கொட்டித்தரும் நீரோடையோ
செம்பருத்தியின் புஷ்பாஞ்சலியைப் புறந்தள்ளி
தன்பாட்டில் ஓடிக்கொண்டேயிருக்கும்

ஆஸ்ரம உட்புறத்தில் வேதங்கள் ஓய்வெடுக்க
வேலிகளின் உரிமைக்காய்
பண்குயில்களும் மைனாக்களும் வாக்குவாதப்படும்

பசுஞ்சாண ஆடைவிரிப்பில் கரையோடி
பளிச்சென சிரித்திடும் வெண்சுண்ணாம்பு
தவக்குடிலின் ஏழ்மைக்கு எழில் சேர்க்கும்

பூக்கும் உரிமை நாற்புறமிருந்தும்
ஓசையின்றியே பூத்திடும்
தபோவனச் செடிகள்

வெண்கிளிகளின் அழைப்பு மணியால்
அவ்வப்போது தவம் களையும்
மானுக்கும் மயிலுக்கும்

இன்றோ ..

பக்தியும் பரவசமும் காவியமாகிய வனச்சோலை
களையிழந்த ஓவியமாய் காட்சி தர
கலங்கி நிற்கிறது கானகம்

புதுமையாய் இன்றொரு நாள்
வெறுமையாய் விடிந்து வினாக்கொள்ள
பொறுமையிழந்தது அஞ்சுகமொன்று

பச்சிலை மரத்துக்கிளையில் தன்
காதல் பேச்சை ஒத்திவைத்தது

கனியுண்ண மறந்தது காதல்துணை
கவலையில் இணைந்தது ஆண்துணை

' இன்றிங்கு நடந்ததென்ன ..?

வட்டவிழிகள் மின்னலடிக்க
வினாவானது ஆழ்மனதின் ஏக்கம்

''மணிக்கிரீடம் துறந்து வந்து
வனமோட்சம் அருளிய தெய்வீக ராமன்


பளிங்குமனை நீங்கி
முள்வெளி மலர்வித்த மாசற்ற சீதை

அரச சுகம் புறந்தற்றி
அண்ணனுக்காய் காடேகிய இளையோன்'

நேற்று இவர்கள் இருந்த இடம்தான்
இன்று இப்படிக்கிடக்கிறது

காவியப்பேரொளிகளின் இடம்பெயர்வால்
இருடைந்தது வனச்சோலை









பச்சிலை மரத்துப் பச்சைக்கிளிகளின்
குண்டுமணிக் கண்கள்
ஒன்றையொன்று ஊடுருவ
ரகு குலத்துக் கண்மணிகளின்
தவக் கோல அங்கலாய்ப்புகள்!

'விழிநோக்கில் கலைமான்
புதுப்பொலிவில் பொன்மான்
குங்குமம் கொண்டவனோ கோமான்
மானினம் நானும் மங்கைநல்லாள் விழிகளுக்கு
அதிசயமோ அப்பொய்மான்
அவசியமோ அம்மாய்மான் ?'

அதுமட்டுமா ஐயம்?

கல்லினுள் அகழிகையை
கண்ணுற்றோன் கண்களுக்கு

அணுவைப்பிளக்க வல்ல
அம்புடையோன் விழிகளுக்கு

பொய்யுலகு புறமொதுக்கி
மெய்புணர்த்தும் நாதனுக்கு
புரியாமல் போனதுவோ
பொய்மானும் : மெய்மானும்

கிளைகள்சுமந்த கிளிகளிடையே
ஐயச் சுமையின் அதிகரிப்பு!

தனயனின்விதியை சுமந்தவன்
மீண்டும்

சுமந்திடல் தருமோ
ஜானகிசொற் தீப்பொறிகள்

சொற்களா அவை !

ஆயிரம் வேலின் கூர்முனைகள்
பக்தியை காயப்படுத்திய கொடுநகங்கள்
நேயத்தின் பொருள்கெடுத்த மொழிப்பதங்கள்!

காப்பவன் கண்ணிழந்தான்
கற்பரசி மதியிழந்தாள்
தெய்வீகம் பொருளிழந்தது

இழக்காமல் இருந்தது
பசுங்கிளியின் தொடர் ஐயம்

'புலம்பலும் தவிப்பும் மனுக்குல லட்சணம்
இழப்பும் கவலையும் மாந்தர்க்கு இலக்கணம்

அஞ்ஞான அலங்கோலம்
மானிடர்க்கே பொருந்தும்
அவதார புருஷர்க்கும் இப்பொருத்தம் தகுமோ?'

வெளிப்படுவது ஐந்தறிவின் கேள்வி
மறைந்திருப்பதோ ஆறறிவின் விடை

புரிந்தது புரியவில்லை
புரியாமலிருப்பதே புரிந்தது


'சமூகச்சிறையும் குடும்பவிலங்கும்
பற்றெனும் தவறைத் தண்டிக்கும்
மங்கையின் மலர்ச்சொல் மயக்கத்தில்
மாயையும் ஜீவனை நிந்திக்கும்
மானிடர் தவறை மானிடர் மறைத்தே
மாயையின் வினைக்குத் துணைபோவர்
ஆதலினாலே மானிடர் இயல்பை
தானே சுமந்தது அவதாரம்'





மரக்கிளையில் சலசலப்பு!
அது –
களைத்து வந்த காற்றொன்றின்
திடீர் குடியேற்றம்


மௌனத்தர்க்கம் முடிவுக்கு வர
ஐயத்தொலிகள் மௌனமாயின.




# 'போஸ்ட் ..'



இந்த 'ஒபிஸ்'
வெறுமையாய்
கிடக்கிறது ..




இந்த 'ஒபிஸ்' பையனும்
தூங்குகிறான் ..



இரண்டுக்கும் செம வேலை தரவேண்டும் .
எப்படி? ..

உங்கள் கருத்துகள், உத்தரவுகள் என்று
வந்துவிட்டால் இருவருமே சுறுசுறுப்பாகி விடுவார்கள் .
ம் .. சுவையுங்கள் , எழுதுங்கள் .



போஸ்ட்,
நெஞ்சமே,
555, புதுத்தெரு,
மன்னார்.





அமெரிக்க சாகசவீரர் ஜேம்ஸ் ஏஞ்சல்

தான் வாழ்ந்த 57வது வயது வரை எக்கச்சக்க அதிசயங்களைத் தேடிக் கண்டுபிடித்தார். அவரது கண்ணில்தான் முதலாவதாக சிக்கியது இந்த அசுர நீர்வீழ்ச்சி. உலகின் மிக உயரமான இந்த நீர்வீழ்ச்சியை 1993இல் தனது விமானத்தில் பறந்து கண்டுபிடித்தார். அவரது கண்டுபிடிப்புகள் யாவும் அங்கீகரிக்கப்பட்டு 'சோல்டோ ஏஞ்சல் ' என்று பெயரிடப்பட்டன. அவரை கௌரவிக்குமுகமாக (Angel falls) என்று பெயரிடப்பட்ட இதன் உயரம் 3212 அடி.

நெஞ்சமே ..
சோர்ந்த மடியில் கவிதை அருமையிலும் அருமை.. ஒவ்வொரு வரிகளும் மனதைத்தொட்டது அதுமட்டுமல்ல.. புத்தகத்தில் அத்தனை அம்சங்களும் பாராட்டத்தக்கவை ..

த. டினேஸ்
யோசப் வாஸ் ம.வி
விடத்தல்தீவு

---

மின்சாரம் துண்டிக்கப்பட்டு வாழ்கின்ற எமக்கு தொலைக்காட்சியும் கிடைப்பதில்லை. இந்த நேரத்தில் 'நெஞ்சமே ..' யின் வரவு எங்களுக்கு ஆறுதலையும், ஆனந்தத்தையும் தந்தது. தேங்க்ஸ் ..

பேதிரு ஜான்சி
பரிகாரிகண்டல்
முருங்கன்

---

இப்படியொரு சஞ்சிகைக்கு உண்மையிலேயே சந்தோசம். மிகச்சிறந்த முயற்சி. தொடர்ந்துவந்து எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தவேண்டும். எம் மண்ணின் புகழுக்கு அடித்தளம் இடவேண்டும்.

வீர சொக்கன்
உடப்பு

---

இப்படியொரு சஞ்சிகைக்கு இத்தனைநாள் காத்திருந்தோம். 'ஆனந்த விகடனைப்பார்த்து எத்தனை நாள் பெருமூச்சு விட்டிருக்கிறேன். 'அட, இப்படியொன்டு எங்கட்ட இல்லையே' என்று.. தீர்ந்தது குறை. இரு கை பற்றியொரு சபாஷ் சொல்லத்துடிக்கிறேன். அத்தனை அம்சங்களும் பிரமாதம். வாழ்த்துக்கள் நெஞ்சமே..

நிலவுமகள்
அடம்பன்

---

நெஞ்சமே ..
ஆக்கங்கள் அனைத்தும் சுப்பர். பக்கத்துக்குப் பக்கம் அதிர வைக்கும் தகவல்கள். ஒரு குறுக்கெழுத்துப்போட்டியும் இருந்தால் நன்று. நெஞ்சமே தொடரவேண்டும், மலரவேண்டும். எங்கள் பங்களிப்பு நிச்சயம் உண்டு.

அப்துல் றகுல்
நிந்தவூர் 5

---

நெஞ்சமே வந்து நெஞ்சம் கவர்ந்தது. கொஞ்சு தமிழ் விஞ்சு நின்றது. அதன் பணிதொடர வாழ்த்துகிறேன்.

கி. குலசேகரன்
அட்டுத்தளை

---

சொந்தமண்ணைப் பார்க்கமுடியாத ஏக்கம் தீர்த்தது 'எங்க ஊரு'. அனைத்தும் மிகச்சிறந்த படைப்புகள் தொடர்ந்து வா நெஞ்சமே ..

சி. சுகந்தினி
கொழும்பு 13

---

நகைச்சுவை நடிகர்கள் நால்வரும் கொழும்பில் கலக்கும் காட்சிகள் அருமை.
வாழ்த்துக்கள் நெஞ்சமே

நவரட்ணம் கஜேந்தினி
குருவளை
அளவெட்டி





நெஞ்சமே நீடு வாழி !

நெடுங்காலம் காத்திருந்து
நெடுந்தூரம் பயணித்து
நெருடல்கள் பலகண்டு
நெஞ்சுறுதி கொண்டெழுந்து
நெடுமரமாய் உருவெடுத்து
நெஞ்சங்கள் கொள்ளைகொண்ட
நெஞ்சமே நீ நீடு வாழி !

வி . ராஜேந்திரன்
கொழும்பு 13

நல்ல வெளியீடு
தரமான சஞ்சிகை
இந்தியப்படைப்புகளுக்கு
சடு கொடுக்கின்ற அம்சங்கள்.
அட்டைப்படமும், விடயங்களும்
வியக்கவைக்கின்றன.
விடாமல் வெளியிட்டு வாசகரை
மகிழ்விக்கவேண்டும்.

ம. புஷ்பராஜா
மட்டக்களப்பு



நம் நாட்டில் இப்படியொரு
சஞ்சிகையை மன்னாரில்
இருந்து வெளியிடுவது என்பது
சாதனையாகும்.
தொடர்ந்து வர வாழ்த்துக்கள்!

கே.எஸ். அன்ரன்
திருகோணமலை

பார்த்ததும் அசந்துவிட்
டோம். எல்லோரும்
சொல்லி மகிழ்ந்தோம்
எங்கள் மலைநாட்டை
யும் 'சேர்த்து எவ்வளவு
அழகான விஷயங்களை
சொல்லியிருக்கிறீர்கள்
நன்றி, வாழ்த்துக்கள்!

வாசன் , தலவாக்கலை




# தோல்நோயும், அதற்கான சித்தமருத்துவ சிகிச்சையும்



## அக்கி –

உடலில் திடீரென ஒரு கோடுபோல அடர்த்தியாகவும், வலியுடனும் கூடிய கொப்புளங்கள் பெரும்பாலும் முதுகு, மார்பு, கழுத்து, முகம் ஆகிய இடங்களில் ஏற்படுகின்றது. இக்கொப்புளங்கள் 2 - 3 வாரம்வரை நீடிக்கும். சில சமயம் கொப்புளம் ஆறினாலும், சில வாரங்களுக்கு அவ்விடங்களில் வேதனை காணப்படும்.

## காளான் தொற்றுநோய்

உடலில் தலையிலும், கண்புருவத்திலும், கழுத்திலும், கைவிரல் இடுக்குகளிலும், அக்குள்களிலும், தொடை இடுக்குகளிலும் வட்டவடிவில் படருகின்றன. அவ்விடங்களில் புண்கள் ஏற்படும். நமைச்சலும் காணப்படும். புண்கள் காய்ந்த பின்னர் பட்டை பட்டையாக உரியும். கை நகங்களில் கறுப்பு நிறம் காணப்படும்.

## தேமல்

பெரும்பாலும் கழுத்து, மார்பு, முதுகு ஆகிய பகுதிகளில் தோலின் நிறத்தைவிடக் கருமையாகவோ, அல்லது மங்கலாகவோ தெளிவாகத் தெரியக்கூடிய ஒழுங்கற்ற ஓரங்களைக் கொண்டதாகக் காணப்படும். இவை பெரும்பாலும் அரிப்பதில்லை.



## சருமத்தில் ஏற்படும் வெள்ளைநிறப்புள்ளிகள்

தோலில் சிலபகுதிகளில் சருமத்தின் இயற்கை நிறத்தை விட்டு வெள்ளைநிறப்புள்ளிகள் காணப்படும். பெரும்பாலும் உடலிலும் கை, கால்களிலும் இந் நிறமாற்றம் ஏற்படும். இவ்விடங்களில் ஊசியால் குத்தும்போது உணர்ச்சி ஏற்பட்டால் ஆபத்து இல்லை என்றும், உணர்ச்சி அற்றிருப்பின் தொழுநோய்க்கு ஓர் அறிகுறியாக இருக்கலாம் என்றும் கருத்தில் கொள்ள வேண்டும்.

## ஊட்டச்சத்து குறைவால் ஏற்படும் சரும நோய்

இக்குறைபாட்டால் உணவுக்கால்வாய் தொகுதியும், நரம்பு மண்டலத்தொகுதியும் பாதிக்கப்படுகிறது. கிரந்தித்தன்மையுள்ள உணவுகளை அதிகம் சாப்பிடுவதாலும், தோலில் அரிப்பு ஏற்படுகின்றது. அக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய புரதச்சத்துள்ள உணவுகளும், மாச்சத்துள்ள உணவுகளும் இதற்கு நன்மை பயக்கும். தட்டைப்பயறு, கடலை, பருப்புவகைகள், இறைச்சி முட்டை, காய்கறிகள், பால், பாலாடைக்கட்டி ஆகியவற்றில் ஊட்டச்சத்தானது மிக அதிகமாகக் காணப்படும். இக்குறைபாட்டால் தோல் உரிந்து புண்ணாதல், வாய்ப்புண், நாக்கில் புண், பசியின்மை, பலவீனம் ஆகியவை ஏற்படும்.

## படை

இது சிறு குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரை வயது வேறுபாடின்றி ஏற்படுகின்றது. தோலில் சிவந்த தடிப்புகளும், சிறு சிறு நீர் கோர்த்த கொப்பளங்களும் காணப்படும். இப்புண்கள் நாளடைவில் சீழ் கோர்த்த கொப்புளங்களாக மாறி உடைந்து, சிதைந்து புண்ணாகும். தோலில் நமைச்சல் ஏற்படும். தோலில் ஏற்பட்ட புண்கள் மாறிய பின்பும் வடுக்கள் காணப்படும்.

கவலை வேண்டாம் ..

*தோல் நோயைத்தடுக்கும் முறைகள் பற்றி தெரிந்து கொள்ள ..*

*சித்தவைத்திய நிபுணர் டொக்டர் எஸ். லோகநாதன் அவர்களை 110 ஆம் பக்கத்தில் சந்தியுங்கள்*



## ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சை 12 மார்க்ஸ் FREE!

# 'இது மாணவர் பக்கம்னாலும் பயிற்சி பெற்றோருக்குத்தான் வாங்க'



வேண்டிய அளவு வினாத்தாள் வாங்கிக்கொடுத்திருந்தாலும், இந்த பரீட்சையைப் பொறுத்தவரை சில விஷயங்களை குடும்ப ரீதியாக கையாலும்போது பலன் கிடைக்கிறது. பாட அறிவும், நடைமுறை அறிவுமாக கலந்திருக்கிற பரீட்சை இது.

இதில் நடைமுறை அறிவைப்பற்றி நாம் கவனமெடுப்பது குறைவு போலத்தோன்றுகிறது. பாடஅறிவிலேயே நின்றுகொண்டு 'படி' 'பாடமாக்கு' என்று பிள்ளைகளை 'டோய்ச்சல்' பண்றதும், வகுப்புகளுக்கு விரட்டுறதுமாக இருக்கிறோம்.

பிள்ளைகளும் கணிதம், தமிழ், ஆங்கிலம் என்று வினாத்தாள்களில் இருக்கிறதுகளையே சுத்தி வருவாங்க. அதனால் மட்டும் முழுமையான புள்ளிகளை பெற்றுவிடலாம் என்பது ஐயத்துக்கறியது.





வெளியில் பாடநேரங்கள் போக வீட்டில் அவர்கள் இருக்கும் சமயத்தில் நடைமுறை அறிவை நாம் ஊட்டலாம். 'பாடம்' என்ற நச்சரிப்புக்கு அப்பால் விளையாட்டாகவே இந்த பயிற்சியை அளிக்கும் போது ஒரு 'ஜொலி'யும் அவர்களுக்குக் கிடைக்கிறது. பாடங்களில் திணரும் மூளைக்கு ஆறுதலும் உண்டு. சுகாதாரம், சுற்றாடல், தமிழ் போன்றவை அன்றாட வாழ்வில் இருப்பதால் அனுபவரீதியாகவே பிள்ளைகளை அதற்குள் கொண்டுவரலாம்.

அதிகளவு புள்ளிகள் பெற்று பாஸ் பண்ணும்போது சந்தோசப்படுகிறோம்.. 'எப்படியோ பாஸ் பண்ணிட்டான்' என்று.

ஆனால் அந்தப் பிள்ளை தன் திறமையை பாட அறிவில்தான் காட்டியிருப்பார். அனுபவ அறிவு பற்றிய எண்ணம் இருந்திருக்காது, அல்லது குறைவாக இருக்கும். இதனை நாம் எடை போடாமல் இருந்துவிடுகிறோம். இது தவறு.

பாட அறிவில் தங்கியிருக்கின்ற மாணவன் சற்று கவனம் குறைந்தாலும் அவ்வளவுதான். அதே சமயம் அனுபவ அறிவையும் சேர்த்துப்படித்த மாணவன் சித்தியடையும்போது தேவைக்கு அதிகமாகவே புள்ளிகள் பெற வாய்ப்புண்டு.




அனுபவ அறிவில் 'கட்டுரை எழுதுதல்' கலபமாகிறது. இதற்கான புள்ளிகள் 12 வரை கிடைக்கிறது. இந்தத் தொகை 'கட் அவுட்' க்கு பெரும் பங்களிப்பை தரும். ஆனால் வினாத்தாள்களில் கட்டுரைப்பகுதியில் கோடுகள் மட்டுமே இருக்கும். தலைப்பு மட்டும் தரப்படும். வசனங்களை மாணவர் எழுதவேண்டும். வசன ஒழுங்கும், சொற்களும் சிறப்பாக அமைந்தால் முழுமையாக புள்ளிகள் கிடைக்கும்.

வினாத்தாளில் தரப்பட்ட தலைப்பின் கீழ் வசன ஒழுங்கையும், இலக்கணச்சொற்களையும் ஆசிரியர் கற்றுத்தருவார்.

ஆனால் பரீட்சையின்போது தரப்படும் தலைப்பு எதிர்பாராததாக இருக்கும். ஒழுங்கும், இலக்கணச்சொற்களும் எழுதுவதற்கு மாறாக வழக்கத்தில் பாவிக்கும் வார்த்தைகளை எழுதி பிழை எடுக்கநேரிடும். உதாரணமாக 'காகத்தின் சிறகை சிறுவன் நீரில் இட்டான்' என்று வரவேண்டியிருந்தால் பழக்கதோசத்தில் 'காக்காவின் ெரக்கையை பொடியன் தண்ணிக்குள் போட்டான்' என்று பிள்ளை எழுதிவிடும்.

என்ன இருந்தாலும் பாலகப் பருவத்துப்பிள்ளைகள்தானே! பாவம், இலக்கண அறிவை பாடத்தின்மூலம் ஊட்டுவது கடினமே.

இவ்விடயத்தில் நாம் அனுபவரீதியாக அவர்களுக்கு உதவலாம். அதுவும் வெகு ஜொலியாக. கட்டுரை எழுதுவதற்கான பயிற்சியளிக்கும் பொறுப்பை நாமும் பொறுப்பேற்கலாம். சுத்த தமிழில் உரையாடும் திறனை அவர்களுக்கு பயிற்றுவிக்கவேண்டும். மாலை நேரங்களில் ஒரு குறிப்பிட்ட நேரத்திலிருந்து அவர்களுடன் தூய தமிழ்ச் சொற்களை பயன்படுத்தி உரையாட வேண்டும். பரீட்சைக்கான தற்கால பயிற்சிமுறை இது என்பதையும் விளக்கவேண்டும். இந்த உரையாடல் பயிற்சியின்போது நாளாந்தம் புதிய புதிய விஷயங்களை நிறைய புகுத்தவேண்டும். மறந்துபோய் சாதாரண சொற்களை பிள்ளைகள் பாவிக்கும் சமயத்தில், செல்லமாக கண்டிக்கலாம். விளையாட்டாக தண்டனை கொடுத்து சிரிக்கப்பண்ணலாம். புராணப்படங்கள், சரித்திர நாடகங்களை நினைவில் கொண்டும் பெற்றோர் இதனை செய்யலாம்.

" தந்தை அவர்களே !
மாலை நேரத்தில் தாங்கள் என்னுடன்
தூய தமிழில் உரையாட மறந்தது ஏனோ?"







" கவலைப்படாதே..
தமிழ்'ல மார்க்ஸ்
குறைஞ்சா நம்ம மேல
பழி வராது .."



சோர்வில்லாத நிலையில் பேசும்போது ஊக்கமும், பிடிப்பும் ஏற்பட்டு தாங்களாகவே ஆர்வம் காட்ட ஆரம்பிப்பார்கள். நாம் வேண்டுமென்று சாதாரணமாய் கதைத்தாலும், சுட்டிக்காட்டி நல்ல உச்சரிப்பை வெளிப்படுத்துவார்கள்.

பரீட்சை நெருங்கும்போது எந்த விஷயத்தையும் அச்சொட்டான தமிழ்ச்சொல்லில் உச்சரிக்க பிள்ளை தயாராகி இருப்பதை கண்டுகொள்வீர்கள். சரியாக உச்சரிக்கும்போது, சொற்களுக்கான எழுத்துக்கள் மூளையில் பளிச்சிடும். எழுதும்போது தப்பாமல் இலக்கணச்சொற்கள் வந்துவிழும். வசனமும் முழுத் தமிழ் வடிவம் பெறும்.

பரீட்சையில் கட்டுரைக்காக வசனம் எழுதும்போது ஒவ்வொரு சொல்லையும் மெதுவாக உச்சரித்து எழுதி, எழுத்தை சரி பார்க்கும்படியும் பிள்ளைக்கு அறிவுறுத்த வேண்டும். ஒரு தலைப்பைப் புரிந்துகொள்வதும், அதற்கான வசன ஒழுங்கு, உச்சரிப்புத்திறனை வளர்த்துக்கொள்வதும் நீங்கள் கொடுக்கின்ற தினசரி இலக்கண உரைப்பாடலில்தான் இருக்கிறது. இதை மட்டும் சரியாக சில நாட்கள் செய்து விட்டால், எந்த விதமான வாக்கியம் எழுதவும் பிள்ளை தயாராகிவிடுகிறது. இது பூரண அனுபவத்தில் ஆராய்ந்து, கண்டறிந்த உண்மை.

***புள்ளிகள் பெற பிள்ளைகள் தயார்***
***பயிற்சி தர நீங்கள் தயாரா..?***


--பயிற்சி ஊக்கம் தொடரும்..



வாசிக்கிறதுன்னா அவர்களுக்கு
'நேரமில்லை'யாம் ..பாவம்!
எங்களுக்கும்
நேரமில்லைதான்..
வாசிக்க நிறைய இருப்பதால்







# பயணம் .. செம்மொழி விழா..!



கைகேயி பஞ்சணையில் கிடந்த
அழகை அப்படியே
விட்டுவிட்டு, ரயில் பிடிக்க
கிளம்பினான் கம்பன் ..

‘ஒருகை பார்க்கிறேன் பயலை..’ என்று
எட்டயபுரத்து ராஜாவை நோக்கி
கிளம்பிய பாரதி, விட்டுவைத்தே
புறப்பட்டான் பஸ்நிலையம் ..





பாரியை பார்க்கவென பறம்புமலை
கடந்தபோது, “..ஔவையே, தெரியுமா
சேதி ..? ” என்று பண்கிளிகள் விளக்க ..
பாட்டியும் நடையை தென்திசைக்கு
மாற்றினாள் ..



காவிரிப்பூம்பட்டினம் ..
களிப்பூட்டும் விழா..
‘ இந்நேரத்திலா கடிதம்..!? ’
விருட்டென்று புறப்பட்ட
கோவலனின் கைப்பிடியில் கண்ணகி.
படகுப்பயணம் அவர்களுடையது ..





பாவம் நளன்..!
புறப்பட வழியில்லை..
வேலைக்கொடுமை ,
மன்னனுக்கு சமைப்பதா..
தமயந்தியை தேடுவதா ..
விசாவுக்கு அலைவதா..
அழைப்பிதழ்கூட அனுதாபப்பட்டது



கமண்டலம் ஒருகை, கடிதம் மறுகை
அகத்தியர் நடைப்பயணம் வான்வெளிமார்க்கம்.
வல்லவரன்றோ..! பொதிகையை கடக்கையில்
பேச்சுத்துணைக்கு தென்றலும் இணைந்தது ..

மொத்தத்தில் --
ஐவகை நிலமும், ஐந்திலக்கணமும் பயணமாயின..

நதியில் இணைந்து,
கடலில் கலந்து,
கரையேறிய இடம் .. மன்னார் பட்டினம் !


கலந்துகொண்ட நிகழ்வு ..

## செம்மொழி மாநாடு..!

பரிமளம் தூவி, பாதுகை தந்து, தர்ப்பைப்புல்
விரித்து வரவேற்றது :

***மன்னார் தமிழ்ச்சங்கம் !***

# வானத்தின் கோபம்..!



விலகச்சொன்னது வானம்
அதனை –
நான் மறைக்கின்றேனாம்

' பூமிப்பந்தின் காவலன் '
' பிரபஞ்சத்தின் எஜமானன் '
' கவிஞர்களின் கற்பனை வாயில் '

என்றெல்லாம் தன்னை மார்தட்டியபடி
என்னை மிரட்டுகிறது

" உடனேயே ஒதுங்கிவிடு "

நான் நடுங்கியபடி
சில நிமிஷம் அவகாசம் கேட்டேன்

" ஏன் ? .." அதட்டியது

" ஏழு வர்ணங்களும் கலைய
சிறிது நேரமாகும் .. அதனால் .. ,"

ஏனோ வானத்தின் கோபம்
இன்னும் அதிகமாகியது

" இப்போது ஒதுங்கப்
போகிறாயா.. இல்லையா..? "






"இப்பவாவது நம்புறீங்களா ..? ஏமாத்துற ஏஜென்சி நான் இல்ல.. அடுத்த கப்பல் லயே உங்க மகன் கனடா போயிடுவான் .."



"ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தா பெரியாஸ்பத்திரிக்கு போயிருப்பேனே ..இப்ப சொல்றீங்களே டொக்டர் ..? "
" நீங்களும் இப்பதான் சொல்றீங்க.. பேங் பலன்ஸ் முடிஞ்சிட்டுன்னு ..."



" ஏதோ..புது பார்க்குக்கு போவோம்னாரு ..இதானோ.."

General Knowledge..



## கிறிஸ்தவர்கள்


| | |
|---|---|
| அமெரிக்கா | - 245,930,675 |
| பிரேசில் | - 170,597,790 |
| ரஷ்யா | - 114,513,145 |
| சீனா | - 110,666,028 |
| மெக்சிக்கோ | - 99,945,687 |
| பிலிப்பைன்ஸ் | - 75,520,618 |
| இந்தியா | - 65,962,801 |
| நைஜீரியா | - 65,123,225 |
| ஜெர்மனி | - 59,325,395 |
| கொங்கோ | - 56,019,573 |



## இந்துக்கள்

| | |
|---|---|
| இந்தியா | - 817,112,705 |
| நேபாளம் | - 18,725,504 |
| வங்க தேசம் | - 14,751,609 |
| இந்தோனேசியா | - 7,217,099 |
| இலங்கை | - 2,515,776 |
| பாகிஸ்தான் | - 2,053,374 |
| மலேசியா | - 1,607,947 |
| அமெரிக்கா | - 1,337,734 |
| தென் ஆபிரிக்கா | - 1,141,006 |
| மியான்மார் | - 818,250 |






## முஸ்லிம்ஸ்

| | |
|---|---|
| இந்தியா | - 155,115,142 |
| பாக்கிஸ்தான் | - 151,806,340 |
| பங்களா தேசம் | - 135,690,886 |
| இந்தோனேசியா | - 127,753,305 |
| துருக்கி | - 71,054,050 |
| ஈரான் | - 68,243,783 |
| நைஜீரியா | - 62,408,926 |
| எகிப்து | - 61,769,354 |
| அல்ஜீரியா | - 32,198,881 |
| மொரோக்கோ | - 29,991,256 |

General Knowledge..



## பௌத்தர்கள்

| | |
|---|---|
| சீனா | - 116,774,700 |
| ஜப்பான் | - 71,795,145 |
| தாய்லாந்து | - 54,158,633 |
| வியட்நாம் | - 41,401,771 |
| மியான்மார் | - 35,476,781 |
| இலங்கை | - 12,999,238 |
| கம் போ டியா | - 11,901,352 |
| இந்தியா | - 7,789,140 |
| தென் ஆபிரிக்கா | - 7,233,870 |
| லாவோஸ் | - 3,001,939 |



" ராத்திரி முழுக்க இடி மின்னல் .. மரங்களும் முறிஞ்சு விழுந்தது ..மின் கம்பங்களும் சரிஞ்சு கிடக்காம் ..நீங்க வேலைக்குப்போகனும்கிறீங்க"

"சரி, போகவேணாமா..? "

"போங்க..இன்சூரன்ஸ் பொலிசிய எங்க வச்சிங்க?



" உங்களுக்கென்ன சேர்..
உங்க காட்டில
எப்பவுமே
மழைதான் .. "

மழையோ மழை ..!



" சன் டிவி பாக்கும் போதெல்லாம் ஏசுவாங்க .. அதால கிடைக்கிற நன்மை யெல்லாம் இவங்களு க்கு தெரியாது ! "



" நமக்கு ஒருகுடை போதும்னு சொன்னப்ப நீங்க நம்பலைதானே..? "



மழையோ மழை ..!



"என்னோட கொப்பியில தாள்கள் கிழிபட்டுக் கிடக்கே ..நீ பாத்தியா..?

" இல்லையே .."

"உன்னட குடையைக் கொஞ்சம் தா மச்சான் .. சாப்பிட்டுட்டு வந்துடுறேன்."

" அட, குடையெல்லாம் நீ சாப்பிடுவியா ..? "





# இளையதளபதி விஜய்!

'காவலன்' படத்துக்காக தமிழ்நாடு தியேட்டர் அதிபர் சங்கத்தோடு மோதி வருகிறார். தமிழ் சினிமாவை உயர்த்தி வருகின்ற டைரக்டர் சங்கரின் ' 3 இடியட்ஸ்' படத்தில் நடிப்பது பெருமையாக இருப்பதாக கூறினார் விஜய்.

ஆனால் தயாரிப்பாளர் பக்கமிருந்து இந்த படம் பற்றிய தகவல் வராமல் இருப்பதால் வருத்தமடைவதாகவும் கூறினார். 'காவலன்' படத்தின் பாடல்களுக்கு இசை அமைத்திருக்கிறார் வித்தியாசாகர். ரசிக்கும்படியாக வந்திருக்கிறதாம். எதிர்பார்ப்பு இருக்கும் அளவுக்கு 'காவலன்' படத்திற்கு எதிர்ப்பும் இருக்கிறதாம். அதனால் பரபரப்பு கிளம்புவதற்கு சாத்தியம் இருப்பதாக சிற்றத்துடன் கூறுகிறார் விஜய்.

'அரசியலில் இறங்குவது உறுதியாகி விட்டதா ..? ' என்று கேட்டதற்கு தமிழ் சினிமாவில் மக்கள் செல்வாக்குள்ள நடிகனாக இருப்பதில் பெருமை கொள்வதாக கூறினார். 'நான் அரசியலில் இறங்குவதாக கிளம்பும் கருத்துகளை என்னால் தடுக்கமுடியவில்லையென்று கூறினார் விஜய்.






## ஏழை குப்புசாமி

உணவகம் சென்று உண்டான்
பில் வந்தது நூறு ரூபாய்

இருந்ததோ தொன்னூறு ரூபாய்

பத்துப் பாத்திரம் தேய்த்துவிட்டு
பத்திரமாய் சென்றான்






## செல்வந்தர் ராமசாமி


உணவகம் சென்று உண்டான்
பில் வந்தது ஆயிரம் ரூபாய்
பத்துவீதம் விலைக்கழிவுடன்.

கடன் அட்டையைக் கொடுத்து
கடையில் இருந்து மீண்டான்

## ஏழை குப்புசாமி

பத்து மாதம் சேமித்து
பத்தாயிரம் ரூபாய்க்கு
தொலைக்காட்சிப்பெட்டி வாங்கினான்
பத்து சதம் குறைவில்லாமல்





## செல்வந்தர் ராமசாமி

பத்தாயிரம் ரூபாய்க்கு தொலைக்
காட்சிப் பெட்டி வாங்கினான் --
பத்துவீதம் விலைக்கழிவுடன்,
பத்துமாத தவணைக்கு
கடன் அட்டையில்

cyfklh

இல்லாதவன் வாங்க பணம் தேவை ,vd;d

உள்ளவன் வாங்கலாம் கடனுக்கு!

அங்கலாய்ப்பவர்:
மொகமட் நவ்ரீர், கொழும்பு


அதிகரித்து வருகின்ற போதைப்பொருள் கடத்தல் செய்திகள் நொந்துபோயிருக்கின்ற எமது சமூகத்தை மேலும் அச்சுறுத்துகிறது.

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த தாக இருவர் வவுனியாவில் கைது செய்யப்ப ட்டது தெரிந்ததே .. வவுனியா பஸ்நிலையத்தில் வைத்து இவர்களை பொலிசார் கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து 544 கிராம் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததாகவும், முந்தல் பொலிஸாருக்குக்கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்தத் தேடுதல் இடம்பெற்ற தாகவும் தெரிகிறது.

இந்த நபர்கள் விஸ்வமடு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாம். இந்த ஹெரோயின் போதைப்பொருளின் பெறுமதி 30லட்சம் ருபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர் என்று செய்தி வெளியாகியிருக்கிறது.











ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு எதிராக லண்டனில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்டது என்று ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இந்த விஜயத்தில் ஜனாதிபதிக்கு தனிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொண்ட போதிலும், வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை யென்றும் குறிப்பிட்டார்.

பொது நலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கி ன்ற நாடொன்றின் தலைவருக்கு பிரிட்டன் வழங்கிய பாதுகாப்பு எந்த வகையிலும் திருப்தி தரவில்லையென்றும் கூறினார்.

அல்கொய்தா அமைப்பின் ஆதரவாளர்கள் இவ்வாறு ஆர்பாட்டம் நடத்தினால் அதனை பிரித்தானிய அரசு அனுமதிக்குமா? என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதிக்கு உரையாற்ற சந்தர்ப்பம் அளிக்க முடியாததால் ஒன்றியத்தின் தலைவர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.



'மன்மதன் அம்பு' படத்தின் கதை உல்லாசப்பயணம் சம்பந்தப்பட்டதை திரையில் பார்த்திருப்பீர்கள். முக்கிய காட்சிகள் 'மெடிட்டரேனியன் க்ருய்ஸ்' என்ற பிரமாண்ட உல்லாசக்கப்பலில் படமாக்கப்பட்டன. முன்னால் கொமாண்டோவாக கமல் நடித்ததுதான் காரணம்.


பட வெளியீட்டு விழாவைவிட படத்தின் இசை வெளியீட்டு விழாவில் புதுமை அம்சங்கள் அதிகம். ' சிங்கப்பூர் இசை விழா' என்ற மகுடத்தோடு இடம் பெற்ற இதில் கமல், த்ரிஷா, மாதவன், சங்கீதா, கே.எஸ். ரவிக்குமார், தேவி பிரசாத் கலந்துகொண்டனர்.

'ஓடியோ' வெளியீடு 'லைவ்' ஆக இருந்தது. சிங்கப்பூர் எக்ஸ்போ மாக்ஸ் பெவிலியன் அரங்கில் மூன்றுமணி நேரம்இது நடந்தபோது. 7000 பேர் கண்டு களித்தனர். இந்த நேரடி ஒலிபரப்பைக் காண்பதற்கு சென்னையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



கிண்டி 'லீ ரோயல் மெரிடியன்' ஹோட்டலில் இந்த வசதி செய்யப்பட்டது.





மேடையில் கமல், தேவி பிரசாத் பாடினர். இப்படத்தில் கமல் சொந்தக்குரலில் பாடியிருந்ததைக் கேட்டிருப்பீர்களே!

பிரேசில் நடனக்கலைஞர்களும், சீன 'ஒக்ரோபாட்' கலைஞர்களும் சிறப்பு நடனவிருந்தளித்தனர். 'மன்மதன் அம்பு' படக்குழுவினர் 300 பேர் கலந்து கொண்டனர். படத்தின் முக்கிய காட்சிகள் ரோம், வெனிஸ், பாரிஸ், பாசிலோன், கொடைக் கானல் ஆகிய இடங்களில் படமாக்கப் பட்டன.

அடையாறு பார்க் ஷெரட்டனில் நடந்த சந்திப்பில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு கமலின் பதில்கள் சில --

"அதிக பட்ஜெட் பட விஷயத்தில் நான் யாரையும் காப்பி அடிப்பதில்லை. எனக்கென்று தனித்துவம் இருக்கின்றது."

"என்னையும், ரஜனியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம். நாங்களும் ஒப்பிட்டுக் கொள்வதில்லை."

" பட்ஜெட் என்று பார்த்தால் 'தசாவதாரம்' பெரிய பட்ஜெட் படம்தான். இப்பொழுது 'மன்மதன் அம்பும் அப்படித்தான்."



"வயதைப்பற்றிப்பேசக்கூடாது. இளமையாக இருக்கவேண்டும் என்று நினைத்தாலே இளமைதான். எல்லோரையும் போலத்தான் நானும் மூன்றுவேளை சாப்பிடுகிறேன். தங்க பஸ்பம் சாப்பிடும் அளவுக்கு தங்கம் இருந்தால் அதையும் சினிமாவிலேயே போட்டிருப்பேன்."






உலகக்கிண்ணக் கிரிக்கெட் கள நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யலாம்.

2011 க்கான உலகக்கிண்ணப்போட்டிகள்

இந்தியா,இலங்கை,பங்களாதேஷ், ஆகிய நாடுகளில் நடக்கின்றன. இந்த்போட்டிகளின் போது காலிறுதி முதல் இறுதிப்போட்டி வரை கள நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யலாம்.

4 காலிறுதி, 2 அரையிறுதி, கடைசியில் இறுதிப்போட்டி ஆகியவற்றில் கள நடுவர்களின் தீர்ப்புக்கள் மேல்முறையீடு செய்யும் முறை அமுலுக்கு வருகிறது.

இந்த தகவலை அறிவித்திருக்கும் ஐ.சி.சி , உலகக்கோப்பைக்கான போட்டிகள் மாசி 19ஆம் திகதி ஆரம்பித்து சித்திரை 2ஆம் திகதிவரை நடைபெறும் என்று தெரிவித்துள்ளது.




ICC Cricket World Cup
2011









பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திரவீரர் ரொனால்டோவுக்கு டிஎன்ஏ பரிசோதனை செய்யப்பட்டது.

1998, 2002, 2006 ஆகிய உலகக்கோப்பைப்போட்டிகளில் பிரகாசித்த ரொனால்டோ, 2002 இல் உலகக்கிண்ணத்தை பிரேசில் பெற்றுக்கொள்ள வழி வகுத்தார். அதே ஆண்டின் உலகின் சிறந்த கால்பந்து வீரர் விருதையும் பெற்றார்.

உலகக்கோப்பைப்போட்டிகளில் அதிக கோல்களை போட்ட வீரராக திகழ்வதோடு, சர்ச்சைகளிலும் தற்சமயம் சிக்கித்தவிக்கிறார். நடிகை சுசனா வார்னர், கால்பந்து வீராங்கனை மிலினி, மொடல் அழகி டேனிலா, மாடல் அழகி ரெய்க்கா ஒலிவர் என்ற பெண்களுடன் தொடர்பேற்பட்டு கால்பந்து உலகில் இருந்து சரியத்தொடங்கினார். இப்பொழுது அலெக்ஸ் மிச்சேல் என்ற பெண் தனது ஐந்து வயதுப்பையனின் அப்பா ரொனால்டோதான் என்று புகார் கூறுகிறார்.

இதனை அறியத்தான் இவருக்கு டி.என்.ஏ பரிசோதனை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.






**வ**சூலில் 'டைட்டானிக்'




திரைப்படத்திற்கு அடுத்தபடியாக இருக்கும் 'அவதார்' படத்திற்கு சிறந்த திரைப்படத்திற்கான 'கோல்டன் குளோப்' விருது கிடைத்திருக்கிறது.

ஜேம்ஸ் கமரோனால் இயக்கப்பட்ட இத்திரைப்படம் உலகின் கவனத்தை ஈர்த்து பரபரப்பாக ஓடியது. லொஸ்ஏஞ்சலில் நடந்த கண்கவர் விழாவில் இரண்டு 'கோல்டன்குளோப்' விருதுகளை'அவதார்' திரைப்படம் கைப்பற்றியது. இப்படத்தின் மூலம் சிறந்த இயக்குனராக ஜேம்ஸ் கமரோன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஒஸ்கர் விருதையும் பெறும் வாய்ப்பு 'அவதார்' படத்திற்கு அதிகம் உள்ளது.ஏனெனில் 'கோல்டன்குளோப்' விருதினை பெற்ற படங்களுக்கு அந்த வாய்ப்பு எதிர்பார்க்கப்படுகின்ற ஒன்று. கனடாவைச் சேர்ந்த ஜேம்ஸ் கமரோன் இயக்கிய 'டைட்டானிக்' திரைப்படம் ஏற்கனவே 11 ஒஸ்கர் விருதுகளை வென்றுள்ளது







**'சி**ங்கையில்



குருஷேத்திரம் படவிழாவில் செய்தி ஊடகங்களை கடுமையாக தாக்கிப்பேசினார் கவிஞர் வைரமுத்து. படத்தின் ட்ரெயிலரை கவிப்பேரரசு வெளியிட்டு பேசிய போது, சிங்கப்பூர் தமிழ்க் கலைஞர் கள் பெருமளவில் பங்கேற்றனர் ''செய்திகளை வெளியிடுவதில் மட்டும் ஆர்வம் காட்டப்படுவதால்,முறையான தகவல்கள் வெளிவருவதில்லை. இதனை பத்திரிகை நிறுவனங்களின் மேலாண்மையும் கண்டு கொள்வதில்லை. பத்திரிகைகளின் நிலை இப்படித்தான்.'' என்று சாடிய கவிஞர் 'சிங்கையில் குருஷேத்திரம்' படத்தின் சிறப்புகள் பற்றிப் பேசினார். விழாவில் படத்தின் இயக்குனர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.






84 ஆம் பக்கத்தொடர்ச்சி ..

# Attention Health ..!





சித்தவைத்திய நிபுணர்
Dr. S. லோகநாதன்
B.S.M.S., R.A.M.P

தோல் நோய்கள் என்றாலே அடிப்படை சிகிச்சைமுறை முதலில் சுத்தம்தான் ..

சுத்தம், சுகாதாரம் அவசியம். எனவே தினசரி குளித்து, தோலைச்சுத்தப்படுத்துதல் அவசியம். தோல் நோயாளிகளுடன் தொட்டுப் பழகுவதைத் தவிர்த்தல் வேண்டும். அவர் பயன்படுத்திய ஆடைகளை அணியவோ, படுக்கைகளை பயன்படுத்தவோ கூடாது. குடும்பத்தில் ஒருவருக்கு சருமநோய் ஏற்பட்டால், அக்குடும்பத்தில் உள்ளஅனைவருமே தம்மை பரிசோதித்துக் கொள்வது நல்லது.





சரும நோய் உள்ளவர்கள் கிரந்தித் தன்மையுள்ள உணவுக ளைத்தவிர்த்தல் அவசியம்.

நகங்களை வளர்க்ககூடாது. சுத் தப்படுத்தி வெட்டிவிடுதல் வேண்டும். பருத்தி ஆடைகளை அணிதல் நன் மை பயக்கும். உடலில் அழகு சாதனப்பொருட்களை பயன்படுத்து வதைத்தவிர்க்க வேண்டும். நிறை புணவுகளை உட்கொள்ள வேண்டும்.

அதிலும் பச்சைநிறமுள்ள, மஞ்சள் நிறமுள்ள மரக்கறி வகைக ளையும், பழ வகைகளையும் உட் கொள்ளவேண்டும். உடலில் அதிக வியர்வை காணப்பட்டால், நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் இருத் தல் அவசியம். இரசாயனப்பொருட் களையோ, அமிலப்பொருட்களை யோ கையாளுவதைத் தவிர்க்க வேண்டும். மனக்கவலைகளை நீக்குதல் அவசியம்.

புண்களில் ஈ மொய்க்க விட க்கூடாது. புண்களில் இருந்து வரும் நிணநீரைச் சுத்தமான வெள்ளை நிறத்துணியால் ஒற்றி எடுக்கவேண் டும்.

இன்றைய காலகட்டத்தில் ஆங்கில மருத்துவத்திற்கு நிகராக சித்த ஆயுர்வேத மருத்துவம் திகழ் ந்து வருகிறது. அவ்வண்ணமே மாவட்டங்கள் தோறும் மாவட்ட சித்த ஆயுர்வேத மருத்துவ மனை களும், சித்த ஆயுர்வேத மத்திய மருந்தகங்களும் இயங்கி வருகின் றன.

பிரதேச செயலாளர் பிரிவுகளி ல், பிரதேச சபைகளில் அரசாங்க இலவச சித்த ஆயுர்வேத மருத்துவ மனைகளும் இயங்கி வருகின்றன.

எனவே, நோயாளிகளுக்குத் தகுந்தமுறையில் தரமான சித்த – ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை வழங்கி, அவர்களை இச்சரும நோய் மட்டுமின்றி எந்த நோயிலிருந்தும் சிகிச்சையளித்துக் குணமாக்க முடி யும்.

பெருமளவு மருத்துவப்பணிக ளின் மத்தியிலும், தொலைதூர சமூகத்திற்காக மருத்துவ குறிப்புகள் வழங்கி தொண்டாற்றியவர் :


**Dr. S. லோகநாதன் அவர்கள்**
**' மரகதம் கிளினிக் '**
**மூர் வீதி , மன்னார்**

## Thank You Sir ! ...









## ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் இந்தியா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

சர்வதேச டெஸ்ட் அணிகளுக்கான தரவரிசைப்பட்டியலில் இலங்கை அணி இரண்டு இடங்கள் பின்னோக்கிய நிலையில் உள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியுடன் நடந்த டெஸ்ட் தொடர் சமநிலையில் நிறைவடைந்ததாலேயே இலங்கை அணி இந்த பின்னடைவை நோக்கியுள்ளது.

தரவரிசை அணிகள் -

1. இந்தியா - 129
2. தென்னாபிரிக்கா - 116
3. இங்கிலாந்து - 112
4. அவுஸ்திரேலியா - 110
5. இலங்கை - 109
6. பாகிஸ்தான் - 88
7. மேற்கிந்தியத்தீவுகள் - 85
8. நியுசிலாந்து - 80
9. பங்களாதேஷ் - 07





## துடுப்பாட்டவீரர் தரவரிசையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலாவது இடத்தைப்பிடித்தார், இலங்கை வீரர் சங்ககார.

நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுலகரை பின்னோக்கி நகர்த்திவிட்டே இந்த இடத்தை கைப்பற்றினார் குமார் சங்ககார.

டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசைப்பட்டியலை ஐ.சி.சி வெளியிட்டபோது, மேற்கிந்தியத்தீவுகளுக்கெதிரான டெஸ்டின் போது 150 ஓட்டங்கள் குவித்த சங்ககாரவை முதலிடத்தில் அமர்த்தியது. சச்சின் இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டார். சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் தென் ஆபிரிக்காவின் ஜேக்ஸ் கலிஸ் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.







## 'ஸ்ரீ தானிய ஆலை..!'

"சொரி, மேடம்!
வெயிட் பண்ண
முடியல ..
வாசனை மூக்கை
துளைக்குது .."




அறுசுவை உணவுகளுக்கேற்ற
அதிசிறந்த தூள் வகைகள்..!


மட்டன், சிக்கன், ரசம், சாம்பார், மற்றும் அத்தனை சமையலுக்கும் சுவையூட்டும் மசாலா வகைகள்!, வெளிநாட்டு உறவுகளுக்கும் அனுப்ப உகந்தது!!

நாடுங்கள்!

# ஸ்ரீ தானிய ஆலை

**பெரியகடை, மன்னார்**






வளமான சமூகமாய் உருவாவோம்
வாசிப்பை ஊக்குவிப்போம் ..

Ref No: LK/T/1/155452 Individual Trade Mark






BOC

தேசத்தின் வங்கியாளர்